மலர்-4 இதழ்-84 பிப்ரவரி 16-29 2020 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்



ஆன்மிகமலர்
mobile app
GET IT ON
Google Play

கொடிய வைரஸ்,
பேரழிவை
தடுக்க உதவும்
இந்து மதத்தின்,
கலாச்சாரம்,
பண்பாடு

இலவச
e- book

# அனாதையாக விடப்பட்ட கடவுள்களும் கோவில்களும்

# சிவராத்திரி ஸ்பெஷல்

சிவாலயத்துக்குள் எப்போதும் திரியாங்க நமஸ்காரம் (இருகரங்களையும் சிரம் மேல் குவித்து) செய்ய வேண்டும்.

பிராகாரத்தில் பிரதட்சணம் செய்யும் பொழுது மிகவும் நிதானமாகச் செய்ய வேண்டும்.

உட்பிராகார பிரதட்சணத்தைவிட வெளிப்பிராகார பிரதட்சணமே மிகவும் சிறந்தது.

ஆலயத்தில் குறைந்தது மும்முறை கொடிமரத்துக்கு அருகே வணங்க வேண்டும். மும்முறை வலம் வர வேண்டும்.

அபிஷேக காலத்தில் பிரதட்சணம் செய்யக்கூடாது. கொடிமரத்தையும் சேர்த்துபிரதட்சணம் செய்ய வேண்டும்.

ஆலயத்தை விட்டு வெளிவரும்போது கொடிமரத்துக்கு அருகில் வணங்க வேண்டும். ஆலயத்துக்குள் எந்த சந்நிதியிலும் வணங்கக்கூடாது.

இறைவன், இறைவிக்கு அபிஷேகம் நடக்கும் பொழுது பிரதட்சண நமஸ்காரங்களைத் தவிர்க்க வேண்டும். ஆலயத்தில் ஆண்டவனைத் தவிர வேறு எவரையும் வணங்கக்கூடாது.

ஆலயத்தில் நெய்விளக்கு ஏற்றினால் நினைத்தது நடக்கும். நல்லெண்ணைய் ஆரோக்கியத்தை அளிக்கும்.



தேங்காய் எண்ணை வசீகரத்தை அளிக்கும். இலுப்ப எண்ணை சகல காரியங்களிலும் வெற்றியைத் தரும். மறு ஜென்மத்திலும் நன்மை அளிக்கும்.

திருமணமாகி 5ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் குழந்தை இல்லாமல் இருப்பவர்கள் ஸ்ரீதட்சணாமூர்த்தி அஷ்டகத்தை வியாழக் கிழமைகளில் மாலை 5 மணி முதல் 7 மணி வரை ஒன்பது தடவை பாரா யணம் செய்தால் பலன் கிடைக்கும்.

சிவாலய வழிபாடு செய்யும் போது லிங்கத் திற்கு வலப்புறம் இருந்து பணிய வேண்டும்.

பூவும், நீரும் சிறந்த சிவபுண்ணியம். செல்வமும், அமைதியும் பெற மகேசனை பூவும், நீரும் கொண்டு வழிபட வேண்டும்.

சிவனின் திருமேனியில் சந்தனக்காப்புப் பொருத்திக் குளிர்வித்தால் உலகில் உள்ள எல்லா உயிர்களையும் குளிர்விப்பது போல் ஆகும்.

கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம் முதலான நறுமணப் பொருள்கள் கலந்து இறைவனுக்கு ஒரு முறை சந்தனக் காப்பு செய்தவர்கள் தேவ வருடத்தில் கோடி வருடம் சிவலோகத்தில் இன் புற்றிருப்பார்கள்.

பிரதட்சணத்தின் போது தலை பூமியை நோக்கி குனிந்திருக்க வேண்டும். நிலம் அதிர நடக்கக் கூடாது. பிறருடன் பேசிக் கொண்டு பிரதட்சணம் செய்யகூடாது.

பங்குனி உத்திரம் சிவனுக்கு மிகவும் சிறந்த தினமாகும்.

சிவபெருமானுக்குரிய திருப்பணிகள் எதுவாக இருந்தாலும் அவை அனைத்தும் குற்றமற்ற நல்ல அறமே ஆகும்.

## வளரும் நந்தி

ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ யாகந்தி உமா மகேஸ்வரர் கோயில் நந்தி ஒவ்வொரு ஆண்டும் வளர்ந்து வருவதை தொல்பொருள ஆய்வுத்துறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நந்தி வளர்ச்சியின் காரணமாக, ஏற்கனவே ஒரு தூணை கோயில் நிர்வாகம் அகற்றியுள்ளனர். இந்த கோவிலை 15 ஆம் நூற்றாண்டில் விஜயநகர சாம்ராஜ்யத்தின் சங்கம வம்சத்தைச் சேர்ந்த மன்னர் ஹரிஹாரா புக்க ராயாவால் கட்டப்பட்டது. இது வைணவ மரபுகளுக்கு ஏற்ப கட்டப்பட்டது.



கோயிலுக்கு முன்னால் உள்ள நந்தி சிலை தொடர்ந்து அதன் அளவை அதிகரித்து வருகிறது. சிலை ஆரம்பத்தில் அதன் தற்போதைய அளவை விட மிகவும் சிறியதாக இருந்தது என்று உள்ளூர்வாசிகள் கூறுகிறார்கள். இந்த சிலை மீது சில சோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், சிலை செதுக்கப்பட்ட பாறை வகை அதனுடன் தொடர்புடைய அல்லது வளர்ந்து வரும் தன்மையைக் கொண்டுள்ளது என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஒவ்வொரு 20 ஆண்டுகளிலும் சிலை 1 அங்குலமாக அதிகரிக்கிறது என்று இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது. சிலையை உருவாக்க பயன்படும் பாறை வளர்ந்து வரும் தன்மையை வெளிப்படுத்துகிறது என்று பரிசோதனை கூறுகிறது.



## புறாவும் கோவில்களும்

தமிழக கோயில்களில் பழங்காலத்தில் புறாக்கள் வளர்க்கப்பட்டது, ஆனால் இன்று புறாக்களின் எச்சங்களை சுத்தப்படுத்த முடியாத காரணத்தால் அவற்றை விரட்டும் தொழில் நுட்பத்தை பல கோயில்கள் செய்து வருகிறது. ஆனால் உண்மையில் நம் முன்னோர் ஏன் கோயில்களில் புறாக்களை வளர்த்தார்கள் என்பதை பார்ப்போம்.

● கோயில்களில் சிலந்தி கூடு கட்டாது. இதனால் ஒட்டடை என சொல்லப்படும் அசுத்தம் சேராது. ● மரங்களை துளையிடும் வண்டுகள் வராது, வந்தால் புறாக்களின் இரை ஆகிவிடும். ● கரையான் வராது அப்படியே வந்தால் அதுவும் இரையாகி விடும். ● கற்சிற்பங்களை சேதப்படுத்தும் சிற்றுண்டிகள் வராது. மீறி வந்தால் அதுவும் புறாக்களுக்கு இரையாகி விடும். ● வவ்வால் உள்ளே வராது, ஆந்தையும் உள்ளே வராது புறாக்கள் எழுப்பப்படும் ஓசை அவைகளை விரட்டிவிடும். ● புறாக்கள் எழுப்பப்படும் ஓசையானது நோயாளிகளை குணப்படுத்தும். கோயில்களில் உள்ள சக்தியை சிதையாமல் அதிகரித்து மனிதனுக்கு தரவல்லது.



# பெரியகோயில் நந்தியின் தம்பி நெய் நந்தி

## பூச்சிகள் அண்டாமல் காக்கும் சக்கரம்

நெய் வாசம் மற்றும் சுவைக்கு பூச்சிகள் வருவதை பார்த்திருப்போம், வீட்டின் தரையில் நெய் சிறிதளவு கொட்டினால், சற்று நேரத்தில் ஈயும், எறும்பும் குவிந்து விடும்.

ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நந்தீஸ்வரர் கோவிலில் ஆச்சரியப்படும் நடைபெறுகிறது, இந்த கோவிலில் அபிஷேகம் செய்யப்படும் நெய்யை ஈ, எறும்பு மொய்ப்பதில்லை.....! இதற்கான காரணம் இன்றுவரை தெரியாமல் இருப்பது அதிசயம்தான்.

புதுக்கோட்டை மாவட்டம் வேந்தன்பட்டி கிராமத்தில் உள்ள அருள்மிகு நெய் நந்தீஸ்வரர் திருக்கோவில் உள்ளது. இந்த கோயிலில்தான் இந்த அதிசயம் நிகழ்கிறது. இங்கு சொக்கலிங்கேஸ்வரரும், மீனாட்சியம்மனும் அருள்பாலித்து வருகின்றனர்.

அபிஷேக நெய்யை பிற உபயோகத்திற்காக இக்கோவிலில் பயன்படுத்துவதில்லை. அதை கோவில் வளாகத்திலுள்ள ஒரு கிணற்றில் கொட்டி விடுகின்றனர்.

இக்கோவிலில் உள்ள நந்திக்கு லிட்டர் கணக்கில் நெய் அபிஷேகம் செய்து கொட்டிக் கிடந்தாலும் அந்த இடத்திற்கு ஈக்களோ, எறும்புகளோ வராது. கோவிலில் உள்ள நெய்க்கிணற்றில் ஈக்கள் மொய்ப்பதில்லை.

தற்போது, இந்த கிணறு நெய் நிறைந்த நிலையில் இருக்கிறது. பொதுவாக நெய்யின் வாசனைக்கு ஈ, எறும்பு போன்ற உயிர்கள் வரும். ஆனால், இங்கு இவை இன்று வரையிலும் வருவதில்லை.

நந்தீஸ்வரரின் கொம்புகளுக்கு நடுவே ஒரு சக்கரம் உள்ளது. இது இயற்கையாகவே அமைந்த அமைப்பு. இதை வேறு எங்கும் காண இயலாது. நந்தீஸ்வரரின் மேல் பூசிய நெய்யில் ஈக்களோ, எறும்புகளோ உட்காருவதில்லை. இந்த தன்மைக்கு இந்த சக்கரம்தான் ஆதார சக்தியாக அமைந்துள்ளது.

இந்த பகுதியில் 90 வருடங்களாக வேப்பமரம் ஒன்று உள்ளது. இந்த வேப்பமரத்தின் அடியில் நெய் நந்தீஸ்வரர் சுயம்புவாக தோன்றி உள்ளார். இந்த சுயம்பு நந்திக்கு வேப்பமரத்து நந்தி என்றும் பெயரிட்டு வழிபட்டு வருகின்றனர். தம்பி நந்தி' என பக்தர்கள் செல்லப்பெயரிட்டு அழைக்கின்றனர். இவர் தஞ்சாவூர் நந்தீஸ்வரரின் தம்பியாகக் கருதப்படுகிறார்.

தம்பி நந்தி என முன்னோர் அழைத்ததற்கு ஏதேனும் காரணம் இருக்கும், ஆனால் தற்போது இதற்கான காரணம் யாருக்கும் தெரியவில்லை. ஆனாலும் "தம்பி நந்தி என்றே அழைக்கின்றனர்.





# கலங்கா மனம்...

ஆன்மீகத்தில் ஈடுபடும்போது ஒருசிலருக்கு பல்வேறு சோதனைகள் வந்து செல்வது வாடிக்கையாக உள்ளது.

கடவுளை கும்பிடும் போது எனக்கு ஏன் இந்த சோதனை வருகிறது. நான் வணங்கும் கடவுள் என்னைக் காப்பாற்ற முன்வரவில்லையே என்ற மன வருத்தமும் அதிகம் காணப்படும்.

இப்படிப்பட்ட வருத்தம் என்பது இறைவனால் நமக்கு கொடுக்கப்படும் அங்கீகாரத்தின் முதல் படி என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால் எந்த பிரச்சனையும் சாமானிய நிலையில் தோன்றிவிடும்.

முற்றும் துறந்த பல ஆன்மீக பெரியவர்கள் கூட பல்வேறு இன்னல்களை அனுபவித்து, அந்த இன்னல்களை பொருட்படுத்தாமல் இறை சிந்தனையை மட்டுமே பொருட்படுத்தியதன் விளைவு, இன்று அவர்கள் இறைவனுடன் ஒப்பிட்டு பேசும் அளவிற்கு இந்துமதத்தில் இணைந்துள்ளனர்.

பெற்ற குழந்தை நடக்கும்போது, தாய் தந்தை பாதுகாப்பான இடத்தில் வைத்துதான் நடை பயிற்சி கொடுப்பார்கள், அந்த சமயத்தில் குழந்தை விழுந்தாலும், உடலளவில் காயம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வார்கள், ஆனால் குழந்தை தன்னை தாய் தந்தையர் விழ வைத்து வேடிக்கை பார்க்கிறார்கள் என்று நினைத்துக் கொள்ளும்.

இதுபோன்றுதான், இறைவன் தாய் தந்தையாக நின்று நம்மை மெருகேற்றுகிறார், தன் பக்தர்களுக்கு ஒரு உன்னத நிலையை தருவதற்குதான், அவர்களின் மனோ நிலைக்கு ஏற்ற துன்பங்களை அளந்து தந்து, பக்தர்களை மெருகேற்றுகிறார்.

அப்படி அவர் மெருகேற்றிய ஒருசிலரின் துயரத்தையும், அந்த துயரத்தை அனுபவித்தவர் களையும் பார்ப்போம்....

தகப்பனே கொலை செய்ய முயற்சித்த போதும் "ப்ரஹ்லாதன்" மனம் கலங்கவில்லை...

சுடுகாட்டில் பணிபுரிபவருக்கு அடிமையாக் கிய போதும் "ராஜா அரிச்சந்திரன்" மனம் கலங்கவில்லை...

பெற்ற பிள்ளையே கேவலப்படுத்திய போதிலும் "கைகேயி" மனம் கலங்கவில்லை...

உறவினர்களே சபை நடுவே அசிங்கப்படுத்திய போதும் "விதுரர்" மனம் கலங்கவில்லை...

அம்புப்படுக்கையில் வீழ்ந்த போதிலும் "பீஷ்மர்" மனம் கலங்கவில்லை...

இளம் விதவையான சமயத்திலும் "குந்திதேவி" மனம் கலங்கவில்லை...

தரித்ரனாக வாழ்ந்த சமயத்திலும் "குசேலர்" மனம் கலங்கவில்லை...

ஊனமாகப் பிறந்து ஊர்ந்த போதிலும் "கூர்மதாஸர்" மனம் கலங்கவில்லை...

பிறவிக் குருடனாக இருந்தபோதிலும் "சூர்தாஸர்" மனம் கலங்கவில்லை...

மனைவி அவமானப்படுத்திய போதிலும் "சந்த் துகாராம்" மனம் கலங்கவில்லை...

கணவன் கஷ்டப்படுத்திய போதும் "குணவதிபாய்" மனம் கலங்கவில்லை...

இருகைகளையும் வெட்டிய நிலையிலும் "சாருகாதாஸர்" மனம் கலங்கவில்லை...

கைகால்களை வெட்டிப் பாழுங்கிணற்றில் தள்ளியபோதும் "ஜயதேவர்" மனம் கலங்க வில்லை...

மஹா பாபியினிடத்தில் வேலை செய்த போதும் "சஞ்சயன்" மனம் கலங்கவில்லை...

பெற்ற பிள்ளையை பறிகொடுத்த போதும் "பூந்தானம்" மனம் கலங்கவில்லை...

கூடப்பிறந்த சகோதரனே படாதபாடு படுத்தியபோதும் "தியாகராஜர்" மனம் கலங்கவில்லை...

நரசிம்மர் சன்னிதியில் விஷ தீர்த்தம் தந்த போதும் "மஹாராஜா ஸ்வாதித் திருநாள்" மனம் கலங்கவில்லை...



சோழ ராஜனின் சபையில் கண்ணை இழந்த பின்பும் "கூரத்தாழ்வான்" மனம் கலங்கவில்லை...

"எப்படி முடிந்தது இவர்களால்..?"

ரகசியம்...

"தங்களோடு இறைவன் எப்பொழுதும் இருக்கின்றான் என்று உணர்ந்ததால்..."

கடவுள் எப்பொழுதும் கூடவே இருக்கிறான் என்று உணர வழி?

"ஆழ்ந்த நம்பிக்கை..." அந்த நம்பிக்கை ஏற்பட வழி..?

**முதல் வழி... (சொல்லறிவு)**

அறிஞர்கள், ஞானிகள் மற்றும் சான்றோர்களின் கூற்றை மனபூர்வமாக ஏற்று கொள்ளுதல்...

**இரண்டாம் வழி... (சுய அறிவு)**

மன அமைதியுடன், நடுநிலை உணர்வுடன், ஆழ்ந்த சிந்தனையில் புத்தி பல வகைகளில் ஆய்வு செய்து, உண்மை விளங்கும் போது மனம் தெளிவடைந்து... அப்போது ஏற்படுவது...

**நம்பிக்கை ஏற்பட்ட பின்...**

மனம் செல்ல வேண்டிய பாதையில் சரியாக சென்று, உடல் மற்றும் மன ஆற்றலை பெருக்கி கொள்ளும் பயிற்சியாக... தொடந்து செய்யப்படும் பிரார்த்தனை முறைகள்...

**அந்த பிரார்த்தனைகள்...**

எந்த மதம் சார்ந்ததாகவும் இருக்கலாம்

"மந்திரமாக இருக்கலாம்..."

"ஜபமாக இருக்கலாம்..."

"கீர்த்தனைகளாக இருக்கலாம்..."

மேலும், அனைத்திற்கும் அடிப்படையாக விளங்கும் "அன்பும், அறநெறியும், உண்மையும், சத்தியமும், நியாய தர்மங்களை காக்கும் பண்புகளாகவும்..." இருக்கலாம்.

இவற்றை மாறாமல் கடைபிடித்தால்...

வாழ்வில் தோன்றும் எந்த சங்கடங்களையும் எளிதில் கடக்கலாம்...

என்ன நடத்தாலும், எதை இழந்தாலும், "ஆத்ம திருப்தியுடன் செய்யும் செயல்களே ஆத்ம பலத்தை தரும்..."

அந்த ஆத்ம பலமே... எதையும் தாங்கும் சக்தி...



# மயிலிறகின் மகிமைகள்

மயில் இறகு என்றதும், சிறு வயதில் மயில் இறகை புத்தகத்தினுள் வைத்து, அது குட்டி போடும் என்று நம்பி பலர் வைத்திருந்தது கட்டாயம் ஞாபகத்திற்கு வரும்.

மேலும் மயில் கடவுள் முருகனின் வாகனம் என்பதால், அதன் இறகை புனிதமானதாக கருதி, பலரும் தங்களது வீட்டு பூஜை அறையில் வைத்திருப்போம். ஆனால் இந்த மயில் இறகு பல தோஷங்களை நீக்கும் என்பது தெரியுமா? ..

வாஸ்து தோஷம் . வீட்டின் வாஸ்து தோஷத்தை நீக்க 8 மயில் இறகைப் பயன்படுத்த வேண்டும். அந்த எட்டு மயில் இறகையும் ஒன்று சேர்த்து, ஒரு வெள்ளை நிற கயிற்றினால் கட்டி, பூஜை அறையில் வைத்து 'ஓம் சோமாய நமஹ' என்ற மந்திரத்தை உச்சரித்து வர வேண் டும்.. சனி தோஷம் சனி தோஷம் நீங்கு வதற்கு, மூன்று மயில் இறகை ஒன்று சேர்த்து கருப்பு நிற கயிற்றினால் கட்டி, சிறிது பாக்கை நீரில் போட்டு, அந்நீரைத் தெளித்தவாறு 'ஓம் சனீஸ்வராய நமஹ' என்று தினமும் 21 முறை உச்சரிக்க வேண்டும்...



அலமாரி நகை மற்றும் பணம் வைக்கும் அலமாரியில் ஒரு மயில் இறகை வைக்க வேண்டும். இதனால் அந்த அலமாரியில் செல்வம் அதிகம் சேர்வதோடு, நிலைக்கவும் செய்யுமாம்...

எதிர்மறை ஆற்றல்கள் மயில் இறகை வீட்டின் முன் வைப்பதால், வீட்டினுள் எதிர்மறை ஆற்றல்கள் நுழைவதைத் தடுப்பதோடு, வீட்டில் இருக்கும் எதிர்மறை ஆற்றல்களும் நீங்கும். அலுவலக இடம் ஒருவர் அலுவலகத்தில் தாம் அமரும் இடத்தில் மயில் இறகை வைப்பதன் மூலம், அவரது இடத்தின் அழகு மேம்படுவதோடு, உற்பத்தி திறனும் அதிகரிக் குமாம். பூச்சிகள் வராது மயில் இறகு வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள உதவும். அதுவும் இதனை வீட்டின் சுற்றில் வைத் ால், பல்லிகள் மற்றும் இதர பூச்சிகள் வருவதைத் தடுக்கலாம்.

அன்யோன்யம் மற்றும் புரிதல் திருமணமான தம்பதியர்கள், தங்களின் படுக்கை அறையில் மயில் இறகை வைத்திருப்பதன் மூலம், தம்பதி யருக்குள் இருக்கும் பிரச்சனைகள் நீங்கி, அன்யோன்யம் அதிகரிக்கும்.





# சிவதாண்டவம்

சைவர்களின் முழுமுதற்கடவுளான சிவபெருமானால் ஆடப்பட்ட தாண்டவங்கள் சிவதாண்டவங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சிவபெருமான் தண்டு முனிவருக்கும், பரத முனிவருக்கும் தாண்டவங்களை உருவாக்கி கற்பித்தார் என்று நாட்டிய சாத்திரத்தின் நாலாவது அத்தியாயமான தாண்டவலட்சணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவபெருமானின் தாண்டவம் உலக நலனை நோக்கியே நிகழ்ப்படுவதாகவும், அதனுடைய நோக்கமானது உயிர்களை மலங்கள் (குற்றங்கள்) பிடியிலிருந்து விடுவிப்பதாகும். சிவதாண்டவத்தில் சிவனின் உடலமைப்பு அணி கலன்கள் கைகளில் உள்ள படைக்கலன்கள், தலைமுடி மற்றும் பாதங்களின் அமைப்பு ஆகிய அனைத்திற்குமே மெய்ப்பொருளியல் விளக்கங்கள் சைவர்களால் எடுத்துரைக்கப்படுகின்றன. ஒவ்வொரு தாண்டவங்களும் வெவ்வேறு மெய்பொருளியல் கோட்பாடுகளை விளக்குகின்றன. நூற்றியெட்டு பரதநாட்டிய நிலைகளை குறிக்கும் நடன தாண்டவங்களை சிவபெருமான் ஆடினார்.

1.தாளபுஷ்பபுடம்
2.வர்த்திதம்
3.வலிதோருகம்
4.அபவித்தம்
5.ஸமானதம்
6.லீனம்
7.ஸ்வஸ்திக ரேசிதம்
8.மண்டல ஸ்வஸ்திகம்
9.நிகுட்டம்
10.அர்தத நிகுட்டம்
11.கடிச்சன்னம்
12.அர்த்த ரேசிதம்
13.வக்ஷஸ்வஸ்திகம்
14.உன்மத்தம்
15.ஸ்வஸ்திகம்
16.பிருஷ்டஸ்வஸ்திகம்
17.திக்ஸ்வஸ்திகம்
18.அலாதகம்
19.கடீஸமம்
20.ஆஷிப்தரேசிதம்
21.விக்ஷிப்தாக்ஷிப்தம்
22.அர்த்தஸ்வஸ்திகம்
23.அஞ்சிதம்
24.புஜங்கத்ராசிதம்
25.ஊத்வஜானு
26.நிகுஞ்சிதம்
27.மத்தல்லி
28.அர்த்தமத்தல்லி
29.ரேசித நிகுட்டம்
30.பாதாபவித்தகம்
31.வலிதம்
32.கூர்நிடம்
33.லலிதம்
34.தண்டபக்ஷம்
35.புஜங்கத்ராஸ்த ரேசிதம்
36.நூபுரம்
37.வைசாக ரேசிதம்
38.ப்ரமரம்
39.சதுரம்
40.புஜங்காஞ்சிதம்
41.தண்டரேசிதம்
42.விருச்சிககுட்டிதம்
43.கடிப்ராந்தம்
44.லதா வ்ருச்சிகம்
45.சின்னம்
46.விருச்சிக ரேசிதம்
47.விருச்சிகம்
48.வியம்ஸிதம்
49.பார்ஸ்வ நிகுட்டனம்
50.லலாட திலகம்
51.க்ராநதம்
52 குஞ்சிதம்
53.சக்ரமண்டலம்
54.உரோமண்டலம்
55.ஆக்ஷிப்தம்
56.தலவிலாசிதம்
57.அர்கலம்
58.விக்ஷிப்தம்
59.ஆவர்த்தம்
60.டோலபாதம்
61.விவ்ருத்தம்
62.விநிவ்ருத்தம்
63.பார்ஸ்வக்ராந்தம்
64.நிசும்பிதம்
65.வித்யுத் ப்ராந்தம்
66.அதிக்ராந்தம்
67.விவர்திதம்
68.கஜக்ரீடிதம்
69.தவஸம்ஸ்போடிதம்
70கருடப்லுதம்
71.கண்டஸூசி
72.பரிவ்ருத்தம்
73.பார்ஸ்வ ஜானு
74.க்ருத்ராவலீனம்
75.ஸன்னதம்
76.ஸூசி
77.அர்த்தஸூசி
78.ஸூசிவித்தம்
79.அபக்ராந்தம்
80.மயூரலலிதம்
81.ஸர்பிதம்
82.தண்டபாதம்
83.ஹரிணப்லுதம்
84.பிரேங்கோலிதம்
85.நிதம்பம்
86.ஸ்கலிதம்
87.கரிஹஸ்தம்
88.பர ஸர்ப்பிதம்
89.சிம்ஹ விக்ரீடிதம்
90.ஸிம்ஹாகர்சிதம்
91.உத் விருத்தம்
92.உபஸ்ருதம்
93.தலஸங்கட்டிதம்
94.ஜநிதம்
95.அவாஹித்தம்
96.நிவேசம்
97.ஏலகாக்ரீடிதம்
98.உருத்வ்ருத்தம்
99.மதக்ஷலிதம்
100.விஷ்ணுக்ராந்தம்
101.ஸம்ப்ராந்தம்
102.விஷ்கம்பம்
103.உத்கட்டிதம்
104.வ்ருஷபக்ரீடிதம்
105.லோலிதம்
106.நாகாபஸர்ப்பிதம்
107.ஸகடாஸ்யம்
108.கங்காவதரணம்

# கொடிய வைரஸ், பேரழிவை தடுக்க உதவும்
# இந்து மதத்தின், கலாச்சாரம், பண்பாடு

மனிதன் எப்போதும் இறை சக்திக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பது விதி, மறக்கும்போது பல்வேறு இயற்கை சீற்றங்களின் வாயிலாக அடிக்கடி இயற்கை மனிதர்களுக்கு உணர்த்துகிறது, ஆனால் மனித மனம் ஏனோ அதை ஏற்க மறுக்கிறது.



வசதி வாய்ப்பு, சொகுசு வாழ்க்கை போன்றவற்றிற்கு அடிமையாகும், உடலும் மனமும், பல நேரங்களில் இயற்கையையும், கடவுளையும் ஆராதிக்க மறந்து விடுகிறது.

எப்போதும் 5 நட்சத்திர ஓட்டலில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் சாப்பாடு சாப்பிட்டவங்களும்,கோடிக் கணக்கான பணமும், லட்சக்கணக் கான மதிப்புலகிரிடிட் கார்டு வைத் திருந்தவங்க கூட, சென்னையில ஏற்பட்ட வெள்ளத்தின்போது சாப்பிட ஏதாவது கிடைக்குமான்னு காத்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்துல கடவுளை வேண்டாதவங்க கூட கடவுளை கூப்பிட்டாங்க....

இப்ப சூரியனுக்கே போட்டியாக ஒரு சூரியனையே உருவாக்கும் அறிவியல் தொழில் நுட்பம் படைத்த சீனாவில் ஒரு சிறு வைரஸ் உருவாகி ஆட்டம் காண வைத்துள்ளது.

கடந்த பத்து வருடங்களில் உலகமே வியக்கும் அளவு கட்டு மானம், உற்பத்தி, ராணுவம் என சகல துறையிலும் அபார வளர்ச்சி பெற்றது சீனா.

அங்கு நிலவி வரும் 45 டிகிரி கடும் குளிர், நோயை வேகமாக பரப்பி வருகிறது. சீதோஷண நிலை மாறினால் மட்டுமே நோயின் தாக்கம் குறையும் என்பதே இன்றைய நிலை.

சீனாவில் கடவுள் நம்பிக்கை என்பது இருந்தாலும், பண்பாடு என்பதற்கும், கலாச் சாரம் என்பதற்கும் முக்கியத்துவம் சற்று குறைந்ததே இந்நோயின் தாக்கத்திற்கு முக்கிய காரணமாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரை கடவுள்களின் உருவங்கள் ஒரே மாதிரி இருந்தாலும், கடவுள் வழிபாடு பலவாறு கடைபிடிக்கப்படுகிறது, அதைப்போன்று பல்வேறு கலாச்சாரங்கள் இருந்தாலும், அதை வகுத்த முன்னோர்கள் ஒவ்வொரு காலச் சூழலுக்கேற்ப வாழ்க்கை முறையை வகுத்துள்ளனர்.

ஒவ்வொரு மாநிலங்களுக்கும் ஒவ்வொரு விதம் கலாச்சாரம், பண்பாடு மாறினாலும், அவை அனைத்தும் அந்த நாட்டின் காலச் சூழலுக்கு ஏற்பவே நமது முன்னோர்கள் வகுத்துள்ளனர்.

வருடம் முழுவதும் வெப்பமாக இருக்கும் நம் நாட்டிலே, எந்த மாதத்தில் அசைவம் தவிர்க்க வேண்டும் எதை உண்ண வேண்டும் என நம் முன்னோர்கள் சொல்லி வைத்தனர்.

ஒவ்வொரு கடவுளின் பெயரால் மக்களை கட்டுபடுத்தி வைத்தனர். எந்தந்த நாட்களில் அசைவம் உண்ணகூடாது, எந்த நாட்களில் விரதம் இருக்க வேண்டும் என்று சொல்லியது அனைத்தும் முன்னோர்களின் அறிவியலே.

பிற உயிர்களை புசிக்கும் விலங்குகள் போல வாழ்ந்த மனிதனை மனிதனாக மாற்றியது ஆன்மீகமே. மேலும் எந்த ஒரு நாடும் ஒரு நல்ல கலாச்சாரத்தின் மீதும் பண்பாட்டின் மீதும் கட்டமைக்க பட்டிருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அந்த வளர்ச்சியால் பயனில்லை என்பதே சீனா நமக்கு உணர்த்தும் பாடம். ஆனால் இந்தியாவில் கலாச்சாரம், பண்பாடு என்பது இந்து மதத்தைச் சார்ந்தே இருக்கிறது.

கடவுளுடன் நம் முன்னோர் இணைத்ததற்கு காரணம், கடவுள் மீது உள்ள பயம் கலந்த பக்தி, கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் அனைவரும் பின்பற்றவைக்கும் என்ற நம்பிக்கைதான்.

ஒருசில காலகட்டங்களில், ஒருசில கலாச்சார முறைகள், பண்பாட்டு முறைகள் தேவையற்றதாகிவிடுகிறது. ஆனால் அதை நாம் மூடப்பழக்கம் என்று முழுவதுமாக சொல்வது தவறு, அந்தக் கால கட்டத்தில்அந்த முறை பயன்பட்டிருக்கும். இப்படி நம் கலாச் சாரமும் பண்பாடும் வளைந்து கொடுக்கும் தன்மையுடையதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இந்த இடத்தில் பகுத்தறிவு என்ற வாதத்தை முன்வைத்து, கிரகண நேரத்தில் இறைச்சியை சாப்பிடுவது, பெண்களின் தாலியை அறுப்பது, குங்குமம் வைக்கும் பழக்கத்தை மறுக்க குங்குமத்தை அழிப்பது, சாமி சிலையை உடைப்பது, சிலை வழிபாடே கூடாது என்று கூறி உயி ரோடு இருக்கும்போது தனக்கே சிலை வைத்துக்கொள்வது, போன்ற தேவையற்ற செயல்கள்தான் இன்று பகுத்தறிவு என்று கூறப்படுகிறது.

நாட்டை பிடிக்கும்நோக்கத்தில் வந்த


ஆன்மிகமலர் மெயில் புக்

வந்தேறிகள் கூட்டம், இந்திய மக்களின் ஒற்றுமையையும், ஏற்றத்தாழ்வின்றி வாழ்ந்த பண்பாட்டையும் சிதைக்கும் நோக்கத்தில், அரசர்கள், மன்னர்கள், ஜமீன்தார்கள் போன்றவர்களிடம் சூழ்ச்சி செய்து, உருவாக்கி வைத்த உயர்சாதி, கீழ்சாதி போன்ற வாதங்கள்.

மனிதர்களில் தீண்டத்தகாதவர் என்ற கொடிய வாதங்களை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எதிர்த்த, நந்தனார், இராமானுஜர், ராகவேந்தர் போன்ற எண்ணற்றவர்கள்தான் உண்மையில் பகுத்தறிவுவாதிகள்.

இன்று அரசியலுக்காக இந்து மதத்தையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் எதிர்ப்பது பகுத்தறிவு அல்ல.

இந்தியாவில் இந்து மதத்தையும்பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், கடைபிடிப்பவர்களிடம் எந்தவித வைரசும் பரவுவதில்லை, அவர்கள் தொடர்ந்து இயற்கை மரணம் நிகழும்வரை வாழ்வதையும் இன்றும் பார்த்திருக்கிறோம்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் Carona வைரஸ், இதற்கு முன்பு தோன்றிய பல்வேறு வைரஸ்களின், பாதிப்பு அதிகம் இந்தியா, குறிப்பாக தமிழகத்தை அவ்வளவாக தாக்காமல் இருப்பதற்கு காரணம், நமது முன்னோர் சொல்லிக்கொடுத்துள்ள பழக்க வழக்கங்களும், இயற்கை நமக்கு அளித்த அற்புத வாழ்வியல் முறைகள் மட்டுமே, வைரஸ் கிருமிகளை அவ்வளவாக தமிழகத்தை தாக்காமல் இதுவரை காத்துக்கொண்டிருக்கிறது.

**கோடை காலம்...**

கோடை காலம் என்பது இயற்கை நமக்கு அளித்த முக்கிய வரப்பிரசாதம், எந்தவித வைரஸ் மற்றும் தொற்றுநோய் கிருமிகளும் கடும் வெப்பத்திற்கு முன் தாக்குப்பிடிக்க முடியாது. சூட்டால் ஏற்படும் கிருமிகளை அழிக்க, வேப்பிலையும், மஞ்சள் போன்றவற்றை அம்மனுக்குரியதாக்கி, அம்மனை வழிபடவைத்து, கோடையில் என்ன செய்ய வேண்டும் எதை செய்யக்கூடாது என்பதை நம் முன்னோர் மிக நேர்த்தியாக வகுத்துள்ளனர்.

**உணவு முறை...**

சீன மக்களைப்போல கண்ட கண்ட உயிரினங்களையும் அதுவும் அரை வேக்காட்டுடன் உண்ணும் பழக்கம் இந்தியர்களுக்கு இல்லை!

பெரும்பாண்மையாக சைவ உணவு சாப்பிடுவது நமக்கு பலம் அசைவம் சாப்பிடுபவர்கள் கூட நன்கு வேக வைக்கப்பட்ட அசைவ உணவுகளையே உண்கின்றனர் அதனால் தான் முன்பு தென்கிழக்கு ஆசியாவை தாக்கிய பறவைக்காய்ச்சல் கூட நம்மை அதிகமாக தாக்கவில்லை!

**மரியாதை தருவது...**

பொது இடத்தில் மற்றவர்களை சந்திக்கும் போது கை கொடுப்பதை தவிர்த்து வணக்கம் கூறுவதால் பெரும்பாலான வைரஸ்கள் தடுக்கப்படுகிறது, இதனால் கைகொடுப்பதால் பரவுகின்ற கிருமிகள் பரவுவதில்லை!

**இறுதி சடங்குகள்....**

இறந்தவர்களின் வாய் மூக்கு மற்றும் கழிவு துவாரங்கள் வழியாக கிருமிகள் வெளியேறாமல் இருக்க மூக்கு வாய் அடைத்து கால்விரல்கள் போன்றவற்றை கட்டுப்போடுவதால் இறந்தவர்களின் உடலிலிருந்து கிருமிகள் வெளியேறுவதில்லை. அதேபோல் இறந்தவர்களின் உடல் மீது போர்த்தப்படும் கோடித்துணி மீது கிருமிநாசினியான மஞ்சள் அறைத்து இறைப்பதால் சவத்தை எடுப்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகிறது! இறப்புக்கு சென்று வந்தவர்கள் குளித்தபிறகுதான் வீட்டிற்க்குள் செல்வது சம்பிரதாயம் இதனால் கிருமிகள் எதுவும் வீட்டிலுள்ள வயதானவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பரவுவதற்கு வாய்ப்பில்லை!




# வைரஸ் பற்றி சித்தர் பாடல்



கிமு 400 ஆம் நூற்றாண்டிலேயே கொரோனா வைரஸ் பற்றி சித்தர் போகர் எழுதிய பாடல் இதுதான் இந்து மதம்

"சரவணனடி வாழ் அரவும்
விடப்பற் கொண்டு நெளியும்
வெட்டியதை புசிப்பவர் தம்
உடலில் சுவாசம் திணறும்
ரோகம் சேரும் சர்வ நாசம் நேரும்
உடற் மண்டலம் சிதைந்து
உயிர் போகுமே பறந்து.

பொருள்: முருகன் காலடியில் தவழும் விஷப்பல் கொண்ட பாம்பினத்தை கொன்று உண்பவருக்கு மூச்சுத் திணறல் ஏற்படும் உடலில் ரோகம் பிடிக்கும் உடலின் நரம்பு மண்டலம் சர்வ நாசமடைந்து துர் மரணம் நிகழும்

**வளைகாப்பு போன்ற சடங்குகள்**

பெரும்பாலும் மென்மையானவர்கள் பெண்கள், இவர்களை பாதுகாக்கவே, தாலி என்ற சடங்கு உருவாக்கப்பட்டது, தாலியை தங்கத்தில் அணிவதைவிட கயிறு மூலம் அணிவது சிறப்பு, குளிக்கும்போது இந்த கயிற்றிற்கு மஞ்சள் தேய்து குளிப்பதால், அந்த மஞ்சளின் நோய் எதிர்ப்பு சக்தி பெண்களின் உடலில் நிரந்தரமாக இருக்க உதவி செய்கிறது, அதுபோன்று குழந்தைப்பேறு அடையும் பெண்ணிற்கு குறிப்பிட்ட மாதத்தில் வளைகாப்பு போன்ற சடங்குகளை செய்யும்போது பூசப்படும் மஞ்சளின் சத்துக்கள் வயிற்றில் இருக்கும் குழந்தைகளை கூட காக்கும் அளவுக்கு நோய் எதிர்ப்பு சக்திகளை உருவாக்கும் தன்மையுடையது.

**இயற்கை மருந்துகள்...**

நோய் வந்தபின் மருத்துவமனைக்கு ஓடுவதை விட நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதற்கான ஏராளமான மூலிகைகள் மற்றும் சித்த வைத்திய முறைகள் நமக்கு ஏராளமாக உள்ளன! நிலவேம்பு கசாயம், பப்பாளி இலை கசாயம், இன்னும் ஏராளமான கசாயங்களை அருந்தியதால் தான் கடந்தமுறை பல இடங்களில் டெங்கு முதலான காய்ச்சல்களை கட்டுக்குள் வைத்துள்ளது!

**தற்காப்பு முறை....**

வெளியில் சென்று வரும்போது கை கால்களை தண்ணீரால் கழுவும் பழக்கமும், சாப்பாட்டிற்கு முன் கை, கால்களை சுத்தப்படுத்தும் பழக்கத்தையும், தரையில்அமர்ந்து குனிந்து சாப்பிடும் பழக்கத்தையும், உடல்உழைப்பு உடற்பயிற்சி மூச்சுப்பயிற்சி யோகாசனம் போன்றவற்றை கடைபிடிப்பதையும் தொடர்ந்து செய்து வந்தால், நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி கூடும்.. அவற்றினை முறையாக பின்பற்றினாலே வியாதிகள், புதிய புதிய வைரஸ்கள் வருவது குறைந்து உடல் நலம் மேம்படும்!

முக்கியமாக இந்து மதத்தில் நம் முன்னோர்கள் சொல்லியுள்ள விரதமுறைகள் கடவுள் வழிபாட்டு முறைகளை முழுவதுமாக கடைபிடித்தாலே கொடிய நோய்கள் நம்மை அண்டாமல் காக்கும். மரம், செடி, கொடி, நிலம், நீர், காற்று போன்ற இயற்கையை ஆராதித்தால் பேரழிவு என்பது மறையும்.

– ஷ்யாம் சுந்தர், சென்னை

# தஞ்சை பெரியகோயில் செல்லும்போது, அவசியம் பொன்மணித்தாட்டாரை தரிசித்தால்தான் முழு பலன்

தஞ்சை பெரிய கோவில் கும்பாபிஷேகம் சமீபத்தில் நடைபெற்று முடிந்தது. கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ள முடியாதவர்கள் தற்போது பெரிய கோவிலுக்கு சென்று வருகின்றனர்.

அவ்வாறு செல்பவர்கள் தஞ்சை பெரிய கோவிலுக்கு மட்டும் சென்றுவந்தால் முழு பலன் கிடைக்காது, அருகில் உள்ள பொன் மணித் தட்டார் முக்தியடைந்த சமாதிக்கு சென்று வந்தால்தான் கோவிலுக்கு சென்ற முழுப் பலனும் கிடைக்கும்.

இதற்கான காரணத்தை வரலாற்று சான்றுகளோடு உள்ளது.

அதைப்பற்றி பார்ப்போம்.

அரசன் ராஜராஜனால் கும்பாபிஷேகம் நடந்து முடிந்த பின்னர் அன்றிரவு அரசன் பெரும்பணி முடிவடைந்த பெருமிதத்தில் உறக்கமின்றி இருந்த நேரத்தில்,

உன் மறைவிலும் இடைச்சியின் நிழலிலும் பொன்மணித் தட்டார் இதயத்திலும் யாம் இருக்கின்றோம்" என்ற இறைவனின் அசரீரியாக உணர்ந்திட்ட மன்னன் மந்திரியை அழைத்து அதற்கு விளக்கம் கேட்க...

"உன் மறைவில் என்பது உங்களால் கட்டப் பட்ட கோயில்" என்பதாகும்.

இடைச்சியின் நிழல் என்பது "இடைச்சியின் வீட்டிலிருந்து எடுத்த கல்" கோபுரத்தின் மேல் இருப்பதாகும்.

"பொன்மணித்தட்டாரின் இதயத்தில் என்பது பொருள் விளங்கவில்லை மன்னா" என்று கூறினார்.

இந்த ஊரில் பொன்மணித் தட்டார் என்பவர் இருந்தால் அழைத்து வருமாறு அரண்மனை ஆட்களை ராசராசன் அனுப்பிவைக்க...

அவர்களும் கடைவீதியில் பொன் வியாபாரியிடம் விசாரித்து பொன்மணித்தட்டாரை கண்டு வணங்கி, அவரை அரசன் அழைத்துவர சொன்ன செய்தியைக் கூற அவர்,

"நானோ எளியவன். அரசரிடம் எனக்கு ஆகவேண்டியது எதுவும் இல்லை மேலும் அரசனுக்கு தேவையான ஆபரணங்களைச் செய்யும் ஆற்றலும் என்னிடம் இல்லை. என்னிடம் இருப்பதோ கோணி வஸ்திரம் மட்டுமே இதைத்தவிர வேறொன்றும் இல்லை. ஆகையால் நான் அங்கு வரவில்லை" என்று கூறிவிட்டார்.



அதை அறிந்த அரசன் பரிவாரங்களுடன் பொன்மணித்தட்டாரைப் பார்க்க வந்தார்.

பொன்மணித்தட்டாரை வணங்கித் தங்களின் இதயத்தில் இறைவன் எழுந்தருளி இருப்பதாகக் கேட்ட அசரீரி விடயத்தை எடுத்துக் கூறி சந்தேகம் போக்குமாறு கேட்டார்.

அதற்கு பொன்மணித்தட்டார் அரசனை நோக்கி ஆலயத்திற்கு நேரே வடக்கு திசையில் ஒரு குளம் வெட்டி அதன் நடுவில் சிறு கோயில் ஒன்று அமைத்து அங்கிருந்து பார்த்தல் கோபுரம் தெரிய வேண்டுமாறு அமைக்கச் சொன்னார். மேலும் அதனை அமைத்து எட்டாவது நாளில் இறைக்காட்சி கிடைக்குமென்றார்.

அவர் கூறியபடியே சிவகங்கை தீர்த்தம் என்னும் திருக்குளத்தை அமைத்து பொன்மணித் தட்டார் மொழிந்தவாறு கட்டி முடித்த எட்டாம் நாள் மன்னர் அவர் வீட்டுக்குச்சென்று பொன்மணித்தட்டாரை அழைத்து வந்தனர்.

திருக்குளக்கோயிலுக்குச்செல்ல தெப்பம் உள்ளது என்று அரசன் கூறினார்,

ஆனால் பொன்மணித்தட்டாரோ தண்ணீரின் மேல் நடந்தே சென்று கோயிலினுள் அமர்ந்து, அவரின் இயத்தில் இறைகாட்சியை எல்லோருக்கும் நல்கி அக்காட்சியோடு ஒளியாக மாறி கோபுரத்தில் கலந்தார். அவரின் சமாதி சிவகங்கைக் குளக்கோயிலில் இருக்கின்றது. இதனைக்கண்ட அரசனும் மற்றவர்களும் வணங்கி இறைவனை காணும் பாக்கியத்தைப் பெற்றதை எண்ணி வியந்தனர்.

இன்றும் பொன்மணி தட்டாரின் சமாதிக்கு அபிஷேகம் செய்த பின்னரே தான் தஞ்சை பிரகதீஸ்வரர் மூலவருக்கு அபிஷேகம் நடைபெறுவது வழக்கமாக உள்ளது.

"விஸ்வகர்ம பக்தோபாக்கியானம்" என்ற பழைய நூலிலும். இந்த சம்பவம் இடம் பெற்றிருக்கிறது. "பொன்மணித்தட்டார் சரித்திரம்" என்னும் நூலிலும், "படைப்புக்கடவுளின் பரம்பரையில்வந்தவர்கள்" என்ற நூலிலும் இந்த குறிப்புகள் உள்ளது.

இனி தஞ்சை பெரிய கோவிலுக்கு செல்லும் போது அவசியம் பொன்மணித்தட்டார் சமாதிக்கும் சென்று வழிபட்டு முழு பலனை அடைவோம்.

# சனிபகவானுக்கு சனிக்கிழமையை சிறப்பித்த கோகுலத்து கண்ணன்



சனிக்கிழமைகளில் பெருமாள் கோவில்களில் கூட்டம் நிரம்பி வழியும் இதற்கான காரணத்தை அறிவோம்.

சனிக்கிழமைக்கும் பெருமாளுக்கும் என்ன தொடர்பு என்பதற்கான விடை பிரம்ம வைவர்த்த புராணத்தில் உள்ளது.

சூரியனுக்கு சஞ்ஜனா, சாயா என இரண்டு மனைவிகள். சூரியனுக்கும் சஞ்ஜனாவுக்கும் பிறந்தவர்கள் யமதர்ம ராஜாவும், யமுனா நதியும். சாயாவுக்குப் பிறந்தவர் சனீஸ்வரன்.

கண்ணபிரான் யமுனையில் உள்ள காளியனை அடக்கி யமுனா நதியைத் தூய்மையாக்கிய பின் அனைத்துத் தேவர்களும் யமுனையைப் போற்றத் தொடங்கினார்கள். கங்கையை விடப் புனிதமான நதியென அதைக் கொண்டாடினார்கள். அதைக் கண்ட சனீஸ்வரன் யமுனையிடம் வந்து, "சகோதரியே! உன்னை மங்களமானவள் என எல்லோரும் கொண்டாடுகிறார்கள். ஆனால் என்னை முடவன் என்றும் அமங்களமானவன் என்றும் கூறுகிறார்களே. உன்னைப் போல நானும் மங்களகரமானவனாக ஆக வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

அங்கே வந்த நாரதர், "சனீஸ்வரா! யமுனை கண்ணனின் திருவுள்ளத்தை மகிழ்வித்தாள். அதனால் மங்களகரமானவளாக இருக்கிறாள். நீயும் கண்ணனின் திருவுள்ளத்தை உகப்பித்தால் மங்களமாகி விடுவாய்!" என்று கூறினார்.

"அவனை மகிழவிக்க நான் என்ன செய்ய வேண்டும்?" என்று சனீஸ்வரன் கேட்டார்.

அதற்கு நாரதர், "ஹோலிகா என்று இரணியனுக்கொரு சகோதரி இருந்தாள். அவளுக்குத் தீயால் சுடப்படாமல் இருக்கும் விசேஷத் தன்மை உண்டு.

பிரகலாதனைப் பல விதமான தண்டனைகளுக்குஉள்ளாக்கியும் அவன் அவற்றால் பாதிக் கப்படாமல் இருப்பதைக் கண்ட இரணியன், ஹோலிகாவிடம் பிரகலாதனை ஒப்படைத்தான். பிரகலாதனைத் தீயில் தள்ளிய ஹோலிகா, தானும் தீக்குள் இறங்கி அவனை வெளி வர முடியாதபடி அழுத்தினாள்.





அப்போது நரசிம்மப் பெருமாள் ஹோலிகாவின் பிடியிலிருந்து பிரகலாதனைக் காத்து வெளியே அழைத்து வந்தார்.

ஹோலிகாவிடமிருந்து நரசிம்மர் பிரகலாதனைக் காத்த நாளைத் தான் ஹோலிப் பண்டிகையாக மக்கள் கொண்டாடுகின்றார்கள்.

அந்த ஹோலிகா பெண் என்பதால் நரசிம்மர் அவளைக் கொல்லாமல் விட்டுவிட்டார்.

இப்போது அவள் தன் சகோதரனான இரணியனைக் கொன்ற திருமாலைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.

திருமால் கண்ணனாக அவதாரம் செய்ததை அறிந்து கோகுலத்துக்கு அவள் வந்துவிட்டாள்.

நாளை இங்கே ஹோலிப் பண்டிகை. தன்னிடம் இருந்து பிரகலாதனை அவன் காத்த நாளான ஹோலிப் பண்டிகையன்று கண்ணனையும் அவன் தோழர்களையும் தீக்கு இரையாக்கிப் பழிதீர்க்கத் திட்டம் தீட்டியிருக்கிறாள்.

சனீஸ்வரா! நீ அந்த ஹோலிகாவைக் கண்டறிந்து அவளை எரித்துச் சாம்பலாக்கி விட்டால், கண்ணனை மகிழ்விக்கலாம். அவன் அருளைப் பெறலாம். நீயும் மங்களகரமாக ஆகலாம்!" என்றார்.

அடுத்தநாள் ஹோலிப் பண்டிகை. கண்ணனும் அவன் தோழர்களும் பெரிய பெரிய கொள்ளிக் கட்டைகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து, நரசிம்மர் மற்றும் பிரகலாதனின் திருநாமங்களைப் பாடி, ஹோலிகாவின் கொடும்பாவியை எரித்து ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கொள்ளிக்கட்டைகளுக்குள் ஹோலிகா ஒளிந்திருந்தாள்.

தீ மூட்டப்பட்டவுடன் கண்ணனையும் அவன் தோழர்களையும் உள்ளே இழுத்துவிட வேண்டும் என்று எண்ணியஅவள் மேல் சனீஸ்வரன் தன்பார்வையைச் செலுத்தினான்.

சனிபார்வை பட்டவுடனேயே ஹோலிகா தன் சக்திகள் அனைத்தையும் இழந்து விட்டாள்.

கண்ணன் தீ மூட்டினான். அத்தீயில் ஹோலிகா எரிந்து சாம்பலானாள்.

நாரதர் சனீச்வரனைக் கண்ணனிடம் அழைத்துச் சென்று நடந்தவற்றை விவரித்தார்.

அப்போது சனீஸ்வரனது தொண்டுக்கு மனமுகந்தகண்ணன், "சனீஸ்வரா! நீ இனிமேல் மங்களமானவனாகத் திகழ்வாய். உன் கிழமையான சனிக்கிழமையின் விடியற்காலை வேளை மிகவும் மங்களமானதாகக் கருதப்படும்.

அந்நாளின் திதியோ, நட்சத்திரமோ எதுவாக இருந்தாலும், சனிக்கிழமையின் விடியற்காலைப் பொழுது மங்களமானதாகவே கருதப்படும். 28வது கலியுகத்தில் நான் திருமலையில் மலையப்பனாக வந்து தோன்றுவேன்.

சனிக்கிழமைகளில் என்னை வந்து தரிசிக்கும் அடியார்கள் வேண்டும் வரங்கள் அனைத்தையும் அருளுவேன்!" என்று வரமளித்தான். அதனால்தான் 'சனி உஷஸ்' எனப்படும் சனிக்கிழமையின் விடியற்காலை வேளை மங்களமானதாகவும், அனைத்து சனிக் கிழமை களும் பெருமாளுக்கு உகந்த நாட்களாகவும் விளங்குகின்றன.

# அனாதையாக விடப்பட்ட கடவுள்களும் கோவில்களும்

## சபிக்கும் முன்னோர்களும் தேவதைகளும்



உலக அளவில் இந்துமதக் கோவில்கள் பல புதிது புதிதாக உருவாகிவரும் இந்த வேளையில், தமிழகத்தில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள் பாழடைந்து, சிதிலமடைந்து வருவது மிகுந்த மன வருத்தத்தை தருவதாக உள்ளது.

சித்தர்கள் மகான்கள், பண்டைய அரசர்கள் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட, ஆயிரம் வருடங்கள் கடந்த பல கோயில்கள் கூட, இன்று அனாதையாக நிர்கதியாக விடப்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது.

இதில் கிராமத்து குலதெய்வங்கள் கூட அடக்கமாகும், ஒரு குலத்தை காக்கும் தெய்வங்களை கண்டுக்கொள்ளாமல் விட்டாலே, அந்த பாவம் அந்த குலத்தைச் சேர்ந்த மக்களை பரம்பரையாக தொடரும், இதனால்தான் வருடத்திற்கு ஒருமுறையாவது குலதெய்வத்திற்கு பொங்கல் வைத்து வழிபடுவதை இன்றும் மக்கள் கடமையாக கொண்டுள்ளனர்.

ஆனால் வேலைவாய்ப்பு, வசதி போன்ற காரணங்களுக்காக பிறந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு செல்லும் மக்கள் தங்கள் குல தெய்வங்களையே மறந்து விடுகின்றனர்.

இதுபோன்று, ஒவ்வொரு இடத்திலும் நிறுவப்பட்ட கோயில்கள் இன்று கேட்பாரின்றி பூஜையின்றி நிர்கதியடைந்து, பராமரிப்பின்றி புதர்மண்டி, அனாதையாக விடப்பட்டு வருகிறது. பெற்று வளர்த்த, தாய் தந்தையை, வளர்ந்த பிள்ளைகள் எவ்வாறு பாதுகாக்க வேண்டுமோ அதுபோன்று, நம்மை காத்து, ஞானநிலையை அடைய உதவும் இறைவனையும், இறைவன் குடிகொண்டிருக்கும் ஆலயத்தையும் அவசியம் காக்க வேண்டும்.

புண்ணியம் தேடி, பாவத்தை போக்கவேண்டி பாடல்பெற்ற பல தலங்களுக்கு சென்று நிம்மதிக்காக அலைபவர்கள், இதுபோன்ற பராமரிப்பில்லாத கோவில்களை இனங்கண்டு அக்கோவில்களை பராமரித்தாலே இறைதரிசனத்தை நேரடியாக பெற்ற பலன் கிடைக்கும்.

குடும்பத்தில் தொடர் பிரச்சனை, தோல்வி, மன சஞ்சலம், நோய், தடை போன்றவை நீண்ட காலமாக வாட்டி வதைக்கும் போது, குடும்பத்துடன் சென்று அனாதையாக விடப்பட்ட ஆலயங்களை தூய்மை செய்வது, பூஜை செய்வது போன்றவற்றை செய்துவந்தால் மேற்கண்ட பிரச்சனைகள் படிப்படியாக குறையும்.

வழிவழியாக தங்கள் பரம்பரையினர் வழிபட்டு, திருவிழா கொண்டாடி மகிழ்ந்த இறைவன் அந்த குறிப்பிட்ட இடத்தில் வசித்த குடும்பத்தினருடன் ஒன்றிணைந்த தெய்வமாக மாறிவிடுகிறார், அதற்கடுத்து வரும் சந்ததியினர், பணி நிமித்தமாக வெளியூர், வெளிநாடு சென்று, தங்கள் குலதெய்வத்தை மறப்பதுடன், தங்கள் ஊரில் உள்ள கோயில்களையும் மறந்துவிடுவதுண்டு.



ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் கோயில்கள் பராமரிப்பின்றி முட்புதர்கள் சூழ்ந்து இறைவன் அனாதையாக விடப்படுகிறது. இதுபோன்ற கோயில்கள் தமிழகத்தில் மட்டும் ஆயிரக்கணக்கான எண்ணிக்கையில் உள்ளது.

ஒருசில இடங்களில் திருடங்கள், கொள்ளையர்கள் புகுந்து சிலைகளை திருடுவது, கோவிலை சேதப்படுத்துவது, கோவில் இடங்களை தகாத செயல்களுக்கு பயன்படுத்துவது என்று, கோவிலில் உள்ள இறைவனை சித்ரவதை செய்யப்படுவதற்கு சமமான செயல்களும் ஒருசில இடங்களில் நடைபெறுவதுண்டு.

இக்கோவிலை கட்டி பராமரித்த முன்னோர்களின் ஆத்மா, இதுபோன்ற நிலையில் கோவிலை பார்க்கும்போது, நமது சந்ததியினர் நாம் பராமரித்த கோவிலை நிர்கதியாக விட்டுவிட்டனரே என்று சங்கடப்படும்.

இதுபோன்று இறைவனை நிர்கதியாக விடப்படும் கோயில்களில் உள்ள தேவதைகள் மனம் நொந்து விடும்






ஆன்மிகமலர் மெயில் புக்

சாபத்தின் வீரியத்தால், இந்த கோவிலுக்கு தொடர்புடையவர்களை நேரடியாக வந்து சேரும்.

ஒருசிலர் லட்சக்கணக்கில் சம்பாதிப்பார்கள், கோடியில் உழல்வார்கள். ஆனால் குடும்பத்தில் நிம்மதி இருக்காது, எந்த நோயும் இருக்காது ஆனால் உடல் ஏதாவது பிரச்சனையை அனுபவித்துக் கொண்டே இருக்கும்.

குடும்ப உறுப்பினர்கள் உடல் அளவிலும், மனதளவிலும் நன்றாக இருப்பார், நன்றாக சம்பாதிப்பார்கள், ஆனால் திருமணம் ஏதோ காரணத்திற்காக தள்ளிப்போய்கொண்டே இருக்கும்.

ஒருசில தம்பதியர்களுக்கு எந்தவித பிரச்சனையும் இருக்காது, ஆனால் குழந்தை பேறு இல்லாமல் இருக்கும்.

ஒருசிலருக்கு குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக இருப்பார்கள், நன்றாக சம்பாதிப்பார்கள், வசதி வாய்ப்புடன் வாழ்வார்கள், ஆனால் மனதில் அடிக்கடி ஏதோ ஒரு இனம் புரியாத தாக்கத்தை அனுபவிப்பார்கள்.

இதுபோன்ற சம்பவங்களை "விட்ட குறை... தொட்ட குறை" என்று கூறுவார்கள்.

அதாவது தன் குடும்பத்தை நாடி இருந்த கோவிலை, அனாதையாக விட்டதையும், தங்கள் முன்னோர்கள் பாதம் பட்டு, கை தொட்டு, சேவை கைங்கர்யம் செய்துவந்ததை, தொடராமல் விட்டதையும் குறிக்கும்.

இதுவும் ஒருவகையில் பிரம்மஹத்தி தோஷத்தைப் போன்றதுதான்.

மேற்கண்ட பிரச்சனைகளில் உழல்பவர்கள் தங்கள் ஊரில் கைவிடப்பட்ட கோவிலை புனரமைத்தல், பூஜை நடக்க ஏற்பாடு செய்தல் போன்ற விஷயங்களை துவங்கும்போது மேற்கண்ட பிரச்சனைகள் மெல்ல அகலும்.

அந்த ஊரிலேயே தங்கிசெய்ய வேண்டும் என்பதும் கிடையாது, பெற்றவர்களை முதியோர் இல்லத்தில் சேர்க்கும் பிள்ளைகள் வாரத்திற்கு ஒருமுறை, மாதத்திற்கு ஒருமுறை சென்று பார்த்து வருவதைப்போன்று, கைவிடப்பட்ட கோவில்களை சமயம் கிடைக்கும்போதெல்லாம் சென்று பார்ப்பது, உதவி செய்வது போன்றவற்றை செய்து வந்தாலே போதும், இந்த செயல் நமது முன்னோர்களுக்கு மட்டுமின்றி, கோவிலை பாதுகாக்கும் தேவதைகளுக்கு மகிழ்ச்சியை தரும், அவர்களின் மகிழ்ச்சியடையும்போது நம்மை பீடித்திருந்த வருத்தங்கள் மெல்ல அகலும்.













ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
www.aanmeegamalar.com

# திரேதாயுகம்

குருதேவர் அருளுகிறார்: “அடுத்து 3600 ஆண்டுகள் கால அளவைக் கொண்டுள்ள மூன்றாவது யுகமாகிய திரேதா யுகத்திற்கு வருவோம். அது பெரும்பாலான மக்கள் மனோசக்தியைப் பயன்படுத்தும் மனோ யுகமாகும். மனசக்தியானது, தற்போது இருப்பதைவிட வெகு அதிக அளவில் உயர்ந்த முன்னேற்றமடைந்திருக்கும். அனைத்தும் அச்சக்தியினால் பெருமளவிற்கு நிறைவேற்றப்படும். விவேகம் மிகுந்திருக்கும். எனவே அக்காலத்தில் மிகுந்த பாதுகாப்பு இருக்கும். மக்கள் தங்களுடைய பிரச்சனைகளை தீர்த்துக்கொள்வதற்காக அமைதியான உபாயங்களைப் பயன்படுத்த மிகவும் வலிமையான முயற்சியை மேற்கொள்வர். மின்சாரத்தின் பயன்பாடு குறைவாகவும் மனோசக்தியின் பயன்பாடு அதிகரித்துக்கொண்டும் இருக்கும். இருப்பினும் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய மனங்களை அறிய வல்லமை பெற்றிருப்பார்கள் எனச் சொல்வதற்கில்லை. ஆனால் எவ்வாறு ஆற்றல்மிக்க வானொலிகள் ஆற்றல் குறைந்த ஒலிபரப்பைக்கூட ஈர்க்க வல்லனவோ, மேலும் ஆற்றல் குறைந்த வானொலிகள் ஆற்றல் மிக்க ஒலிபரப்பை மட்டுமே ஈர்க்க வல்லனவோ அவ்வாறே மனோயுகத்தில் சில மனிதர்கள் மற்றவர்களைவிட மிக வலிமைவாய்ந்த மனோசக்திகளைப் பெற்றிருப்பர்.”

“நாம் அந்த மனோயுகத்தில் மனதின் சக்தியினால் நமது சக மனிதர்களைப்பற்றி இன்னும் நன்றாக அறிய முடியும். அதனால் தீயவராக இருப்பது எவருக்கும் கடினமே. மிகக்குறைந்த அளவில்தான் போலித்தனம் இருக்கும். ஏனெனில் மக்கள் தங்களுடைய உண்மையான உணர்ச்சிகளை மற்றவர்கள் அறிய மாட்டார்கள் என நினைக்கும்பொழுதுதான் போலித்தன முடையவர்களாக இருக்கிறார்கள். புரிந்துகொள்ளும் தன்மை அதிகரிப்பதன் காரணத்தால் மனித இனம் ஒருவர் மற்றொருவருடன் அதிக அமைதியுடன் வாழ்வதற்கு கற்றுக்கொள்ளும். மனோசக்தி நலம் பெறவும் உடலுக்கு உணவாகவும் பயன்படுத்தப்படும்.”

## சத்திய யுகம்

“மூன்றாவது யுகமான திரேதாயுகத்திற்குப் பிறகு வரும் சத்தியயுகத்தைப் பற்றிக் கூறுகிறார் குருதேவர்: “சத்தியயுகம் அல்லது வாய்மையின் காலம் என்று இந்த யுகத்திற்குப் பெயர். இந்தக் காலத்தில் மனித மனதினால் படைப்பின் அனைத்துப் புதிர்களையும் புரிந்து கொள்ள முடியும் மற்றும் இறைத் தொடர்பில் வாழ முடியும். இக்கால மக்கள் ஸ்தூல உலகத்திற்கும் சூட்சும சுவர்க்கத்திற்கும் இடையில் எந்தத் தடையும் காணமாட்டார்கள். அவர்களால் சூட்சும உலகத்திற்குள் நுழைத்து அத்தளத்திற்குச் சென்றுவிட்டிருக்கும் ஆத்மாக்களுடன் தொடர்பு கொள்ள முடியும். ஏறுமுகமான சத்திய யுகம் 4800 ஆண்டுகள் நீடிக்கும். முழுவதும் வளர்ச்சியடைந்த ஆன்மாக்கள். மற்ற எந்த யுகங்களையும்விட அதிகமாக இந்த யுகத்தில் முக்தியை அடைவர். ஆனால் சத்திய யுகத்தின் முடிவுகூட உலகத்தின் முடிவினைக் குறிக்காது. இந்தச் சுழற்சியானது அனைத்து நான்கு யுகங்களின் ஊடாகவும் இறங்கு முகமாகவும் மறுபடியும் ஏறுமுகமாகவும் தொடர்ந்து மீண்டும் மீண்டும் நிகழும். இடையிடையே பிரளயங்கள் ஏற்படும். அவற்றில் உலகம் இறந்துவிடும். பின்னர் அதனுடைய தொடர்ச்சியான சுழற்சி புதிதாத் துவங்கும். இவ்வுலகம் ஆன்மாக்கள் இறை இலக்காகிய வீடுபேறு எய்துவதற்காகப் படைக்கப்பட்டது: அது ஒரு மாபெரும் பாரத்தை சுமந்து கொண்டிருக்கிறது. நமது அனைத்துப் பணிகளும் முடிக்கப்படும்வரை, நமது ஆன்மாக்கள் இறைவனிடம் திரும்பிச் செல்லும்வரை இவ்வுலகம் ஒருபோதும் முழுமையாக அழியாது. உலகம் ஆன்மாக்களின் பரிணாம வளர்ச்சிக்கென இறைவனுக்கு மேற்கொண்டு தேவைப்படாதபொழுது மட்டுமே, அது இருக்காது. அப்பொழுது உலகத்தின் நிஜமான முடிவு நிகழும். எனவே, நமது பூமியானது வெறும் ஒருசில நொடிகளில் அனைத்துப் பொருட்களும் உருகி ஆவியாகி விடுகின்ற அளவு வெப்பமுள்ள சூரிய அடுப்பினுள் நிலைகுலைந்து விழுந்துவிடும் என அஞ்சாதீர்கள். உலகத்தின் இறுதியான முடிவு வெகு தொலைவில் உள்ளது. அது இன்னும் செய்வதற்கான பணி அதிகமாக உள்ளது..”



76
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

நீங்கள் பிறந்திருக்கும் யுகத்திற்கு மேலோங்கி எழுங்கள்.

குருதேவர் மேலும் கூறுகிறார்: “ நீங்கள் விடுதலை அடைவதற்கென உலகத்தின் முடிவிற்காக காத்திருக்க வேண்டியதில்லை. வேறொரு வழி உள்ளது. நீங்கள் பிறந்திருக்கும் யுகத்தற்கு மேலோங்கி எழுங்கள். லோகாயத காலத்தில் மனித இனத்தின் பெரும்பான்மை பொருள்சார்ந்த மனம் படைத்ததாக இருக்கின்றது. ஆனால் வரும்காலத்திற்கு முன்னோடியாக இப்பொழுதே வாழ்ந்து கொண்டிருக்கும் மகான் ஆன்மாக்களை நீங்களும்கூட காணமுடியும். மன மற்றும்

மின் யுகங்களில் அந்தந்த யுகங்களுக்குரிய சிறப்புப் பண்புகளுடைய மனோபாவங்கள் மேலோங்கிக்கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். அதே சமயத்தில் மற்ற மனோபாவங்களும் உள்ளன. சிலர் மிக உயர்ந்த வளர்ச்சி அடைந்தவர்கள். மேலும் மற்றவர்கள் இன்னும் வளர்ச்சி அடையாதவர்கள். இவ்வாறு இந்த மின் யுகத்தில் இன்னும் கற்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்களை நீங்கள் காணமுடியும். எப்பொழுதுமே ஒரு சமநிலை இருக்கின்றது. தாம் பிறந்துள்ள நாகரீக யுகத்திற்கு முன்னதாக சிலர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் மற்றும் பின்னதாக சிலர் வாழ்ந்துகொண்டிருக் கின்றனர்.”

“திரும்பத் திரும்ப மறுபிறவிகளின் உளடாக குறைந்த வளர்ச்சி உடையவர்கள், அவர்கள் மறுபிறவி எடுத்திருக்கும் யுகத்தின் மனோபாவத்தையும், இறுதியாக இன்னும் வர இருக்கின்ற மேன்மையான யுகங்களுக்குரிய சிறப்பியல்புகளைக்கொண்ட பண்புகளையும் வெளிப்படுத்தும் வரை படிப்படியாக முன்னேறுவார்கள். இவ்வுலகத்தில் சுழற்சிகள், மேலும் கீழும் செல்லும் ஓர் ஏற்ற இறக்கப்பலகை போன்றதாகும். ஆனால் நாம் நமது பரிணாம வளர்ச்சியை சரியான வாழ்க்கை, கிரியாயோகத்தைப் போன்ற ஓர் ஆன்மீக உத்தி ஆகியவற்றின் மூலம் துரிதப்படுத்தும்பொழுது, நாம் நமது காலத்திற்கு முன்னதாக வாழ்கிறோம். மேலும் இந்த அல்லது ஒரு சில ஆயுட்காலங்களுக்குள்ளாகவே இறைவனில் விடுதலைக் காணலாம்.”

மேலே கூறப்பட்டுள்ள யுகங்கள் அப்பொழுது வாழ்ந்த மனிதர்களின் மனநிலைகளைப் பற்றி விவரிக்கின்றன. அப்பொழுது வாழ்ந்த மனிதர்களின் மனநிலை வளர்ச்சி அடையாமலுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். த்ரேதா யுகத்தில் சில மனிதர்களில் மற்ற மனிர்தர்களின் மன உணர்ச்சிகளை பரஸ்பரம் அறியும் மன சக்தியுடைவர்களாக இருந்தனர் என்றும், அதனால் தீமை செய்பவர்களாக யாரும் இல்லை என்றும், சத்திய யுகத்தில் அனைவரும் இறைத் தொடர்புடையவர்களாக இருந்தனர் என்றும் மற்ற யுகங்களைவிட இந்த யுகத்தில் அனைவரும் முக்தி அடைபவர்களாக இருப்பார்கள் என்றும் குருதேவர் கூறுகிறார். அதனால் இந்த யுகம் போலித்தனம் இல்லாத யுகமென்றும் அனைவரும் இறைவனுடன் வாழுபவர்களாகவே இருப்பார்கள் என்பதும்தான் இந்த யுகத்தின் தன்மை. மக்கள் எந்த இடையூறுகளுமின்றி மிகவும் மகிழ்ச்சியாக வாழும் யுகம்தான் சத்திய யுகம்.

இந்த உலகம் பொய்யானது; மனிதரும் அதற்கேற்றவாறு அவர்களின் வாழ்க்கையை நடத்திக்கொள்கின்றனர். சத்திய யுகத்தில் வாழுகின்ற மனிதர்களைப்போன்று மற்ற யுகத்திலுள்ள மனிதர்களும் வாழ்ந்தால் அடிக்கடி பிறவியெடுத்து பூமிக்கு வரவேண்டிய அவசியமில்லை. சத்திய யுகத்திலுள்ள மனிதர்களின் வாழ்க்கையைப்போன்று சரியான வாழ்க்கை வாழ்வதும் தியானத்தால் இறைவனுடன் தொடர்பு கொள்வதும் போன்ற மேன்மையான விஷயங்களை செய்தால் பரிணாம வளர்ச்சி அடைய ஏதுவாகும். சத்திய யுகத்தில் யாரும் யாருக்கும் எந்த கெடுதலும் விளைவிக்கமாட்டார்கள். அந்த யுகத்தில் வாழுபவர்கள் அனைவரும் பரிணாம வளர்ச்சியை அடைந்தவர்கள். இந்த நிலையை அடைந்தவர்கள்தான் பற்றற்றவர்கள்; ஆசைகளை துறந்தவர்கள். உலகம் பொய்யானது, அழியக்கூடியது என்றும் இறைவன் மட்டும்தான் உண்மை என்றும் அழிவற்றது என்றும் உள்ள உண்மையை உணர்ந்தறிந்த மனிதன், இறைவன் மட்டும்தான் வேண்டும் என்று எண்ணுவான். அவனை மட்டும் நேசிப்பான். அவ்வாறான மனிதன் பரிணாம வளர்ச்சியை அடைந்தான் எனப்பொருள். இந்நிலை வரும்வரை ஒவ்வொரு அத்மாவும் பூமிக்கு வந்துதான் ஆகவேண்டும். இவ்வாறானவர்கள் பிறருக்கு எந்தத் தீமையையும் விளைவிக்கமாட்டார்கள். உண்மையிலேயே இப்படிப்பட்டவர்கள் இறைவனை நாடுகிறார்கள்; இறைவனை அடையவேண்டும் என்று பகவான் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு அருளிய, பதஞ்சலி முனிவர் தமது சீடர்களுக்கு அருளிய, மகாவதார் பாபாஜி தமது சிஷ்யரான ஸ்ரீ லாஹிரி மகாசயருக்கு அருளிய மகத்தான கிரியா யோகத்தை பயன்படுத்தி, பரிணாம வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றனர். இவ்வாறு செய்வதால் எளிதில் பிறப்பு இறப்பிலிருந்து ஆன்மா விடுதலை அடையலாம். முக்கியமாக நம் மனதை நாமேதான் சீர்படுத்த வேண்டுமே தவிர வேறு யாராலும் இயலாது. நம் கடமைகள் அனைத்தையும் சரியாகச் செய்யும்பொழுது இறைவனே நமக்குத் தகுந்த இடத்தை அளிப்பான்.



மீண்டும் மலரும்... குருப்ரியா (வசுமதி)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சித்தர்களும் தாந்த்ரீகம்

சித்தர் ரகசியத்தை பற்றி மிக ஆழமாக சிந்தனை தேரை ஓட்டி கொண்டிருந்த நாம், நீண்டகாலமாக இந்த பக்கம் வராமல் மற்ற விஷயங்களை பேசி கொண்டிருந்து விட்டோம். இதற்கு காரணம் பல என்றாலும், சித்தர் தத்துவத்தை விளக்குகிற போது, அறிவும், மனதும், உடலும் ஒரே பாதையில் செல்ல வேண்டும். அப்படி சென்றால் தான் சித்தர்கள் தரிசனங்களை முழுமையாக அனுபவிக்க இயலும். வேறு பல வேலைகளும், கடமைகளும் மனதை இந்த பக்கம் வராமல் தடுத்து நிறுத்தியதே நீண்ட இடைவெளிக்கு முக்கிய காரணமாகும். இனி அப்படி இல்லாமல் இந்த பாதையில் சற்று வேகமாக பயணம் செய்வதற்கு சித்தர்கள் துணை வேண்டும் என்று பிரார்த்தனை செய்து தொடரலாம் என்று கருதுகிறேன்.

சித்தர்களை பற்றி இறுதியாக நமது சிந்தனை நின்ற இடம் சித்தர் தாந்த்ரீகம் என்ற பகுதியாகும். தாந்த்ரீக நெறி மிக பழமையான காலம் தொட்டே இந்தியாவில் இருந்துவரும் நெறியாகும். கபாலிகர்கள் இந்த நெறியின் உள்ளே புகுந்த பிறகு மது, மாமிசம், மங்கையர்கள் என்ற அனாச்சாரங்கள் புகுந்து விட்டதனால், நல்லவர்களும், நயம் மிகுந்தவர்களும் தாந்த்ரீக பண்பாட்டை உதறிவிட்டார்கள். தாந்த்ரீகம் என்றாலே குடித்துவிட்டு கும்மாளம் அடிப்பது தான் என்ற கருத்து பரவலாக மக்கள் மத்தியில் பதிந்து விட்டது.

நிஜமான தாந்த்ரீகம் ஓரங்கட்டப்பட்டு போலிகள் மலிந்து விட்ட காலத்தில் புயல் போல இந்தியாவில் கிளம்பிய மகாயானம், பௌத்தம், ஜைன மதத்தின் சில பிரிவுகள் உண்மை தாந்த்ரீகத்தை தங்களுக்குள் பங்குபோட்டு சிறப்பான முறையில் வளர்க்க துவங்கி விட்டார்கள். மகாயானம், பௌத்தம் எங்கெங்கு பரவியதோ அங்கெல்லாம் தாந்த்ரீகம் தனது ராஜபாட்டயை அமைத்து கொண்டது எனலாம். சீனா, திபெத், பர்மா போன்ற நாடுகளில் இன்றும் அதன் சுவடுகள் மிக ஆழமாக பதிந்திருப்பதை காணலாம்.



தலாய்லாமா, பஞ்சன்லாமா போன்ற பெயர்களை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இவர்கள் திபெத் நாட்டை பூர்வீகமாக கொண்டு சீனாவின் அதிரடி ஆக்கிரமிப்பால் நாடு கடந்த நிலையில் வாழ்ந்து வருவதும் நமக்கு தெரியும். ஆனால், இவர்களை பற்றி தெரியாத பல இரகசியங்கள் பல இருக்கிறது. பொதுவாக லாமா என்ற நிலைக்கு ஒரு சாதாரண மனிதன் வருவதற்கு அவன் தாந்த்ரீக தத்துவத்தில் பல படிகளை கடந்து வரவேண்டும். சாதாரண லாமாக்கள் கதையே இப்படி என்றால் இவர்களின் தலைவராக இருக்கும் தலாய்லாமாவின் நிலை மிக சிறப்பானது என்பதில் ஐயமில்லை. தலாய்லாமாவின் பிறப்பு துவங்கி, இறப்பு வரையிலான காலகாட்டம் ஒவ்வொன்றும் தாந்த்ரீகத்தின் படி மிக முக்கியமான விஷயங்களாகும்.




லாமாக்களின் தாந்த்ரீக சக்தி மனித மனங்களை மட்டுமல்ல, இயற்கையையும் கட்டுபடுத்த கூடியதாகும். வானத்தில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கின்ற மேகத்தை பிடித்து நிறுத்தி பசுவிடத்தில் பாலை கறப்பது போல மேகத்திடம் மழையை கறக்கும் ஆற்றல் வரையில் லாமாக்கள் தாந்திரீகத்தில் நிறைந்திருக்கிறது. நமது முதல் பிரதம மந்திரி நேரு அவர்கள் திபெத் நாட்டிற்கு சென்ற போது அவர் தலைக்கு மேலே மேகத்தை நிறுத்தி பன்னீர் தெளிப்பது போல மழை பொழிய வைத்தது பதிவு செய்யப்பட்ட ஆதாரமாகும். இப்படி இந்தியாவிற்கு இந்திய மரபிற்கும் சொந்தமான தாந்த்ரீகம் மற்றவர்களால் பேணப்பட்டும், மண்ணின் மைந்தர்களால் புறக்கணிக்கபட்டும் இருந்த காலத்தில் சித்தர்களின் தாக்கம் பாரத மண்ணில் வீறுகொண்டு எழுந்தது.

கபாலிகர்கள் அபிச்சார பிரயோக ஆர்ப்பாட்டத்தால் தாழ்வுற்று கிடந்த தாந்த்ரீக நெறியில் கசடுகளும், அசடுகளும் பெருகி கிடந்த போது சித்தர்கள் தக்கது, தகாதது என்பனவற்றை வகைபிரித்து அறிந்து ஒதுக்க வேண்டியதை ஒதுக்கி, சேர்க்க வேண்டியதை சேர்த்து, புதிய இரத்தத்தை தாந்திரீகத்திற்கு புகட்டினார்கள். சித்தர்களின் வருகைக்கு பிறகு, முகம் சுழித்து ஒதுங்கிய சாதாரண ஜனங்கள் தாந்த்ரீக மகத்துவத்தை உணர்ந்து அதன் பின்னால் அணிவகுத்து தொடர ஆரம்பித்தார்கள். அந்த தொடர்ச்சி இன்று வரை அழியாமல் புத்திளமையோடு தாய் தெய்வ வழிபாடாக அம்பிகை வணக்கமாக காஷ்மீர் துவங்கி, கன்னியாகுமரி வரை பரந்து விரிந்து நடந்து வருகிறது.

சிவபெருமானின் ஒரு பாதியான பார்வதி தேவியை பரம்பொருளாக கொண்டு உருபெற்ற சமயபிரிவு சாக்தம் என்று அனைவருக்கும் தெரியும். சாக்தத்திற்கு ஆதாரமாக ஆகமங்கள் பல உண்டு. அந்த ஆகமங்களை சாக்த பரிபாஷையில் தந்திரம் என்று அழைப்பார்கள். சக்தி தந்திரம் என்பதன் அடிப்படையில் உருவான நெறிக்கு தாந்த்ரீகம், தந்திர யோகம் என்ற பெயர்கள் உண்டு. இவற்றில் உட்பிரிவுகளாக மந்திரம், எந்திரம், சக்கரம், உபாசனை போன்ற பலவகை பிரிவுகளும் உண்டு. இந்த பல பிரிவுகளில் பக்தனாக இருப்பவன் எந்த பிரிவு

தனக்கு ஏற்றதாக மனதிற்கு இசைந்ததாக இருப்பதாக கருதி அதை தனது வழிபாட்டு பாதையாக கொண்டு நடந்து சென்றால், இம்மை மறுமை போன்ற மாயா உலகத்திலிருந்து விடுதலை அடைந்து சக்தி உலகத்தில் நிரந்தர வாசம் புரியலாம் என்பதே தாந்த்ரீக யோகத்தின் மைய இலட்சணமாகும்.

உலகை காக்கும் இறைவனை அன்னையாக, அரவணைக்கும் பெண்மையாக வழிபடுகிற மார்க்கம் உலகிலேயே இந்தியாவில் தான் முதல்முறையாக வந்தது. அதன் பிறகே போக பொருளாக கருதப்பட்ட பெண்மை யோக பொருளாக இருப்பது என்று நிஜம் உலகில் மற்ற பாகத்திற்கும் எட்டி அவர்களும் பெண்மையை சக்தி என்று போற்றி துதிக்க ஆரம்பித்தார்கள். சிந்து வழி நாகரீகத்திலும் சக்தி வழிபாட்டின் கூறுகள் பளிச்சென தெரிகிறது. தொல்காப்பியம் உள்ளிட்ட சங்க இலக்கிய நூல்கள் அனைத்திலும் சக்தி வழிபாடு போற்றப்படுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்கள் உருவான காலத்தில் தமிழகத்தில் சாக்த நெறியோடு தாந்த்ரீகமும் கலந்து, புதிய வழிபாட்டு மார்க்கமாக துளிர் விட ஆரம்பித்திருப்பதை உணர முடிகிறது.

திருமூலர் அருளிய திருமந்திரத்தில், நான்காம் தந்திரத்தில் சாக்த நெறி பற்றி மிக விரிவான விளக்கங்கள் இருக்கின்றன. இந்த நூலில் இந்த பகுதியில் மட்டுமின்றி நூல் முழுவதுமே ஆங்காங்கே சக்தி தேவியின் ஆற்றல்கள் பேசபட்டிருப்பதை வைத்து பார்க்கும் போது, திருமூலர் காலம் துவங்கியே சித்தர்கள் நிலையில் சக்தி நெறியும், தாந்த்ரீக நெறியும் இரண்டற கலந்து விட்டதை நம்மால் உணர முடிகிறது.

சிவனும், சக்தியும், மனமும், புக்தியும் போன்றவர்கள் சூரியனும் வெளிச்சமும் போன்றவர்கள் ஒன்றை விட்டு ஒன்று பிரிய இயலாது. பிரபஞ்சத்தின் இருப்பு நிலையில் சிவன் சிவனாகவும், பஞ்ச கர்மாக்கள் என்ற படைப்பு, காப்பு, மறைப்பு, அழிப்பு, அருளல் ஆகிய தொழில்களை செய்யும் போது சிவன் சக்தியாகவும் மாறுபடுகிறது என்பதை சிவஞான சித்தியாரில்

அருளது சக்தி யாரும் அரண் தனக்கு
அருளை இன்றி
தெருள் சிவம் இல்லை அந்தசிவம்
இன்றி சக்தி இல்லை

என்ற பாடல் வரிகள் மிக தெளிவாக நமக்கு விளக்குகிறது. இருப்பினும், சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சைவ சித்தாந்தத்திற்கும், சக்தியை முழுமுதலாக கொண்ட சாக்த நெறிக்கும் திருமந்திரம் என்ற அளப்பெரிய தத்துவ நூலே பிரமான நூலாக தமிழில் விளங்குகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பொதுவாக சிவத்தை பற்றி திருமூலர் பாடியவைகளையே பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருப்பார்கள். சக்தி தத்துவத்தை திருமூலர் போற்றியிருப்பது நம்மில் பலருக்கு தெரியாது. அதை முழுமையாக தெரிந்துகொண்டால் மட்டுமே சித்தர்களின் மார்க்கத்தில் தாந்த்ரீகம் என்பது எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக்கிறது என்பதை நம்மால் உணர முடியும்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு
கொள்ளவும்
போன்:
09442426434









# சிவனுக்குகந்த செய்திகள்



- சிவன் விரும்பி அணிபவை வெள்ளை எருக்கம் பூ, அருகம்புல், ஊமத்தை, வெண்ணீறு ஆகியவையாகும்.
- சிவன் கையில் ஏந்தி இருப்பவை சூலம், மான், மழு, துடி, அக்னி.
- சிவனுக்கு ஆடை தோல். சிவனுக்கு வாகனம் காளை. ஆபரணம் பாம்பும், எலும்பும். மாலை மண்டை ஓடுகள், பன்றிக் கொம்பு, பிட்சை பாத்திரம்.
- சிவனுக்குப் புஷ்பாஞ்சலி செய்யும்பொழுது எல்லாப் புஷ்பமும் கலந்து செய்யலாம்.
- முதல்நாள் சாத்திய வில்வத்தை எடுத்து நீரில் கழுவி மீண்டும் சிவ பூஜை செய் யலாம். ஒரு மாத காலத்திற்கு இவ்வாறு செய்யலாம். முதல்நாள் சாத்திய வில்வத்தை எடுத்து நீரில் கழுவி மீண் டும் சிவ பூஜை செய்யலாம். ஒரு மாத காலத்திற்கு இவ்வாறு செய்யலாம்.
- தாமரை, வில்வம், சதபத்ரம் ஆகியவற்றால் சிவனை அர்ச்சிப்பவன் பெரும் செல்வத்தை அடைவான். நீலோத் பலம், ஜாதி மல்லிகை, பாடலம், அரளி, ஆத்தி, கோங்கு, முல்லை, பலாசம் ஆகியவற்றாலும் அர்ச்சிக்கலாம்.
- புஷ்பபலன் என்னும் நூல் ஒரு கொன்றை மலரை சிவனுக்கு சாத்துபவர் சாலோக பதவியையும், இருமலர்கள் சாத்துபவர் சாமீப பதவியையும், மூன்று மலர்கள் சாத் துபவர் சாரூப பதவியையும், நான்கு மலர் களைச் சாத்துபவர் சாயுஜ்ய பதவியையும் அடைவர் என்று கூறுகிறது.

# இருமலைப் போக்கும் திருப்புகழ் பாடல் தீர்த்தம்

தற்போது இருமல் சளி போன்ற பிரச்சனை உலகெங்கும் பரவி வரும் ஒரு கால கட்டமாக திகழ்கிறது.

மருத்துவமனைகளில் வரும் பலரும் இருமலால் அவதிப்படுபவராகவே இருக்கின்றனர்.

இதுபோன்ற தீராத இருமலால் அவதிப் படுவோருக்கு, அருணகிரிநாதர் இயற்றிய திருப் புகழிலிலிருந்து ஒரு பாடலைப் பாடி தீர்த்தத்தை கொடுப்பது முன்னோர்களின் மரபாக இருந்தது.

இந்த மரபு தற்போது ஒருசிலர் கடைபிடித்து வருகின்றனர். அதைப்பற்றி பார்ப்போம்.

ஒரு தம்ளர் ஆறிய நீரில் சிட்டிகை விபூதியை இட்டு, வலது கையால் மூடிக் கொண்டு இந்தப் பாடலை ஆறு முறை ஓதி, அந்த நீரை அருந் தினால் மேற்கண்ட அவதிகள் தீரும். எந்த வைரஸும் நெருங்காது.

அந்தப் பாடல்களை நமது வாசகர்களுக்கு தருகிறோம்:

"இருமலு ரோக முயலகன் வாத<br>
மெரிகுண நாசி விடமேநீ ரிழிவுவி டாத<br>
தலைவலி சோகை யெழுகள<br>
மாலை யிவையோடே<br>
பெருவயி றீளை யெரிகுலை சூலை<br>
பெருவலி வேறு முளநோய்கள்<br>
பிறவிகள் தோறு மெனைநலி யாத<br>
படியுன தாள்கள் அருள்வாயே<br>
வருமொரு கோடி யசுரர்ப<br>
தாதி மடியஅ நேக இசைபாடி<br>
வருமொரு கால வயிரவ ராட வடிசுடர்<br>
வேலை விடுவோனே<br>
தருநிழல் மீதி லுறைமுகி லூர்தி<br>
தருதிரு மாதின் மணவாளா<br>
சலமிடை பூவி னடுவினில் வீறு<br>
தணிமலை மேவு பெருமாளே !"

இந்தப் பாடலை காலை மாலை என இருவேளை மேற்கூறிய வழிமுறைப்படி செய்து அந்த நீரை அருந்தினால், தற்போதுள்ள சூழ்நிலைக்கு அருமருந்தாக இருக்கும்.

இந்த பாடலை உங்களுக்கு தெரிந்தவர்க ளுக்கும், இருமல் சளித்தொல்லையால் அவதிப்படு பவர்களுக்கு பயன்படும் வகையில் கூறுங்கள்.

# சிவராத்திரியும் சிவாலய ஓட்டம்




மகாசிவராத்திரி: குமரியில் சிவாலய ஓட்டத்தின் சுவையான பின்னணி இதுதான்!

மகா சிவராத்திரியை முன்னிட்டு குமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டம் நடைபெற்று வருகின்றது.

ஆண்டுதோறும் மகா சிவராத்திரி நாளில் குமரியில் பக்தர்கள் பன்னிரண்டு சிவ ஆலயங்களுக்கு நடந்து சென்று வருவார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் கேரளா பகுதியை ஒட்டியிருக்கும் மார்த்தாண்டம் பகுதியில் அமைந்துள்ளது திருமலை அருள்மிகு மகாதேவர் கோவில். சிவராத்திரி நாளில் பக்தர்கள் தங்கள் ஓட்டத்தை இந்த ஆலயத்தில் இருந்துதான் தொடங்குவார்கள்.

திருமலையில் ஆரம்பித்து திக்குறிச்சி, திற்பரப்பு, திருநந்திக்கரை, பொன்மனை, பன்னிபாகம், கல்குளம், மேலான்கோடு, திருவிடைகோடு, திரு விதாங்கோடு, திருபன்னிகோடு, திரு நட்டாலம் என பன்னிரண்டு ஆலயங்களிக்கு பக்தர்கள் நடந்து செல்வார்கள். இது சுமார் 90 கிலோமீட்டர் தூரம் கொண்ட பக்தி பயணம் ஆகும்.

இதில் பங்குகொள்ளும் பக்தர்கள் மூன்று நாள் கடுமையான விரதங்கள் மேற்கொண்டு சிவராத்திரி அன்று ஓட்டத்தை ஆரம்பிப்பார்கள். காலில் செருப்பு அணிய மாட்டார்கள். ஒவ்வொரு கோவில் குளத்திலும் குளித்து ஈர துணியுடன் ஆலயம் சென்று தரிசனம் செய்து பின் அடுத்த ஆலயம் நோக்கி பயணம் செய்வார்கள்.

### சிவாலய ஓட்டத்தின் வரலாறு

இந்த சிவாலய ஓட்டத்திற்கு பல கதைகள் சொல்லப்பட்டாலும் அதிகமாக நம்பப்படுவது சுண்டோதரன் எனும் அரக்கனின் கதை தான். முன்பு ஒரு காலத்தில் சுண்டோதரன் என்னும் அரக்கன் ஒருவன் இருந்தான். அவன் மிக சிறந்த சிவ பக்தன். சிவலிங்கத்தை எங்கு பார்த்தாலும் குளித்து அந்த லிங்கத்தை மூன்று முறை சுற்றி விட்டுதான் மறுவேலை பார்ப்பான். அவன் ஒரு முறை சிவ பெருமானை நினைத்து கடுமையாக தவம் புரிந்தான். அவனது தவத்தில் மகிழ்ந்த சிவ பெருமான் அவன் முன் தோன்றி, “என்ன வரம் வேண்டும்” என்று கேட்க, அரக்கன் “தான் யாரை நோக்கி தனது சுண்டு விரலை காட்டுகிறேனோ அவன் சாம்பல் ஆகிட வேண்டும் ” என்று வரம் கேட்க, சிவபெருமானும் கொடுத்து விட்டார்.

வரத்தை பெற்றதும் அரக்கனுக்கு தனக்கு உண்மையிலே வரம் கிடைத்து விட்டதா என்று சந்தேகம் எழுந்தது. உடனே சிவபெருமானிடம், “நான் இதனை சோதித்து பார்க்க தேவலோகம் வரை போகவேண்டும். இப்போது அதற்கு நேரமில்லை. அதனால் தங்களிடமே இதனை சோதித்து பார்க்க போகிறேன்” என அரக்கன் சொல்ல சிவபெருமான் அதிர்ந்து அங்கிருந்து தப்பித்து ஓடுகிறார்.

ஓடும்போதுதான் சிவபெருமானுக்கு அரக்கனின் சிவபக்தி குறித்து நினைவு வர தன் கழுத்தில் இருந்து ஒரு ருத்ராட்சையை எடுத்து கீழே போட்டார். அதில் ஒரு லிங்கம் உருவானது. லிங்கத்தை கண்டதும் மூடனான அரக்கன் அருகில் உள்ள குளத்தில் குளித்து லிங்கத்தை வழிபாடு செய்து பின் துரத்தினான். சிவபெருமானும் அரக்கன் தன்னை நெருங்கும் போதெல்லாம் ஒரு ருத்திராட்சையை போட்டு வந்தார்.

ஓடும் போது சிவபெருமான் காக்கும் கடவுளான விஷ்ணுவை உதவிக்கு கோவிந்தா.... கோபாலா.... என அழைத்தபடி ஓடினாராம். அதன் அடையாளமாகாத்தான் தற்போதும் பக்தர்கள் ஓடும் பொது கோவிந்தா... கோபாலா என்று கூவிய படி செல்வார்கள். சிவராத்திரி அன்று சிவ ஆலயத்தில் நட்டகும் விசேஷத்தில் கோவிந்த கோபாலா என பக்தர்கள் முழங்குவது வித்தியாசமாகவும் புதுமையாகவும் இருக்கும்.

பன்னிரெண்டாவது ஆலயமான நாட்டலாம் வரும்போது விஷ்ணு பெண் அவதாரமான மோகினியாக தோன்றி அரக்கனை மயக்கி அவனுடன் ஆடுகிறார். விஷ்ணு ஆடுவதை போன்றே அரக்கனும் ஆட, விஷ்ணு தனது சுண்டு விரலை தன்னை நோக்கி காட்ட, அரக்கனும் அவ்வாறே செய்ய அரக்கன் சாம்பல் ஆகி விடுகிறான். அதனால் தான் பன்னிரெண்டாவது ஆலயத்தில் மட்டும் விஷ்ணு சன்னதியும் இருக்கும். சிவாலய ஓட்டத்தில் ஓடும் பக்தர்கள் தங்கள் கையில் விசிறி வைத்திருப்பார்கள். எல்லா ஆலயம் செல்லும்போது லிங்கத்திற்கும் விசிறி விடுவார்கள்.

அதாவது தங்களுடன் சிவபெருமானும் ஆடுவதாக ஐதீகம். அவ்வாறு ஓடும் சிவபெருமானுக்கு இளைப்பாற விசிறி விடுவது வழக்கம்.

பக்தர்கள், நடையாக நடப்பது மட்டுமல்லாது வாகனங்களிலும் இந்த பன்னிரண்டு கோவில்களுக்கு இந்த சிவராத்திரி நாளில் சென்று வருவார்கள். குமரி மட்டுமல்லாது கேரளாவில் இருந்தும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருவார்கள். இந்த பிரசித்தி பெற்ற சிவாலய ஓட்டத்திற்காக சிவராத்திரி நாளில் குமரி மாவட்டத்தில் உள்ளூர் விடுமுறை அளிக்கப்படுகிறது.





# சிறைப்படுத்தப்பட்ட கொள்கை

❖❖❖

கடவுள் என்பது மனதினுள் சிறைப்படுத்தப்பட்ட ஒரு எண்ண மாகும். உலகிலுள்ள எல்லா மதங்களின் பொதுவான கொள்கையும் இதுவே. எனது கேள்வி என்னவென்றால் கடவுள் என்பது ஒரு மனிதன், ஒரு மதம் இவைகளின் சிறைப்படுத்தப்பட்ட எண்ணமாக இருந்தால் அது வேண்டுமென்றே செய்த நியாயப்பிரச்சாரமாகவே கருதப்படுகிறது. சூரிய ஒளியின் கீழே எந்த ஒரு கொள்கையும் இப்படிப்பட்ட நிரந்தரமானதல்ல.

❖❖❖

வேண்டுமென்றே சிறைப்படுத்தப்பட்ட கொள்கை என்றால் என்ன? இதற்கே பிடிவாதம் அல்லது ஹடவாதம் என்று பெயர். இத் தகைய கொள்கையில் மனிதனுடைய சிந்தனைக்கு சில நன்மைகளும் இருக்கின்றன, சில தீமைகளும் இருக்கின்றன. சிந்தனைக்கும் மூளைக்கும் இதுவே விருந்தாகும். இனாமாக விருந்து வைக்கிறார்கள் என்று எப்பொழுதும் பிரச்சாரம் செய்யவே முடியாது. அதுபோலத்தான் சிறைப்படுத்தப்பட்ட கொள்கையை பிரச்சாரம் செய்வது என்பதாகும். இது என்னுடைய தவிர்க்க முடியாத வாதமாகும். ஆணுக்கும் பெண்ணுக்கும் இக்கொள்கையைத் தலையிலே திணித்தால் பல சமயம் அவர்கள் சிந்திக்க முடியாதவர்களாகவே ஆகிறார்கள்.

❖❖❖

பல சமயங்களில் உள்ளதை போன்று இந்து சமயத்திலும் இத்தகைய கொள்கை இருக்கிறது என்றாலும் அது ஆகம முறை களைப் பின்பற்றுவதற்காகவே இருக்கிறது. சில கொள்கைகளை நாம் பிறர் மீது திணித்தால் அவர்களின் சொந்த சிந்தனை என்ற இறையாண்மை புத்தியை விட்டு ஆவியாகிவிடுகிறது. நல்லவை களை மண்ணில் நிலைநாட்ட வேண்டும் என்பதற்கே. எது எப்படி இருந்தாலும் எல்லாவிதமான கொள்கைகளும் சிந்தனையாளர் களால் வாதிப்பதற்குரியதே ஆகும்.

❖❖❖

ஞானத்தை அடைய ஒரு குறிப்பிட்ட சிறைப்படுத்தப்பட்ட கொள்கையை கடவுளின் மீது வைக்கிறார்கள். இதற்கே சிறிய அளவுத்தன்மை என்று பெயர். இப்படி செய்து அதை உபதேசித்தால் மனிதனுடைய சிந்தனை சிறிது வேலை செய்து அவன் கடவுளை நினைக்க ஆரம்பிக்கிறான். இதனால்தான் கடவுள் என்ற தத்துவத்தின் மீது சிறிதளவு திணிக்கப்படுகின்ற கொள்கை நன்மை செய்கிறது. கடவுள் ஒரு நல்லவன். அவன் பல நன்மைகளை உடையவன் என்று ஆகின்றான். இந்துமதத்தில் இத்தகைய நிலை உண்டு.

❖❖❖

எதுதான் ஒழுக்கம் என்று அறுதியிட்டு உறுதியாகச் சொல்லவே முடியாது. முதலில் நீ ஒழுக்கத்தையும் முறையாக கை கொள்ளுவதையும் பின்பற்று.

அதன்பின் ஒழுக்கமே தனது வடிவத்தை எடுத்துக்காட்டி விடும். இதுதான் ஒழுக்கத்தின் விளக்கம்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.
தொடர்பு கொள்ளவும்
08825844033

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# நவவித பக்தி

தனது உள்ளார்ந்த பக்தியை கடவுளிடம் செலுத்துவதே பக்தி மார்க்கத்தை அனுசரிக்கும் ஒரு ஸாதகனின் குறிக்கோளாக உள்ளது. இதை அடைவதற்கு ஒரு ஸாதகன் நவவித பக்தியை மேற்கொள்கிறான்.

ச்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணம் ஆகிய மூன்றும் கடவுள் நம்பிக்கையை உறுதிப்படுத்து கிறது.

பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம் ஆகிய மூன்றும் ஸகுண மூர்த்தியிடம் நமது தொடர்பை வலுப்படுத்துகிறது.

தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம் ஆகிய மூன்றும் நமக்குள்ளிருக்கும் பக்தி உணர்வை மேம்படுத்துகிறது.

**ச்ரவணம்:** இறைவனின் கல்யாண குணங்கள், மகிமை, பெருமை ஆகியவைகளை சாதுக்களின் வாயிலாக ச்ரத்தையுடனும் நம்பிக்கையுடனும் கேட்பதே ச்ரவண பக்தியாகும். குருவின் உபதேசங்களைக் கேட்டு ஞானம் அடைவதும் இதில் சேர்ந்ததே.

**கீர்த்தனம் :** இறைவனைப் புகழ்ந்து போற்றும் துதிகளைப் பாடுவதே கீர்த்தன பக்தியாகும். குருவின் உபதேசங்களைக் கேட்டு பயனடைந்து இந்த நல்ல விஷயங்களை மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்லி அதன் மூலம் அவர்களுக்கும் பக்தி உணர்வை ஊட்டுவதும் இவ்வகையில் சேரும்.

**ஸ்மரணம் :** இறைவனின் நாமம், மகிமை, லீலா விபூதிகள் ஆகியவற்றை எப்போதும் நினைவில் இருத்தி அதிலேயே மூழ்குவது ஸ்மரண பக்தியாகும். ஸ்தூல ரூபத்தில் படமோ, விக்ரஹமோ வைத்து வணங்குவதும், ஸூட்சுமத்தில் நாமஜபம் செய்வதும் இதில் அடங்கும். நாம் ஒவ்வொரு கணமும் சுவாசித்து உயிர் வாழ்வது அவனருளாலேதான். நமது ஒவ்வொரு செயலையும் நம் மூலம் நடத்துவது இறைவன்தான் என்னும் எண்ணம் நம் மனதில் நன்கு வேரூன்றும்போது நமது பக்தி உணர்வும் உறுதிப்படுகிறது. மகாபாரதத்தில் குந்தி, ‘கிருஷ்ணா, எனக்கு அடிக்கடி கஷ்டத்தைக் கொடு. அப்போதுதான் உன்னைத் தொடர்ந்து நினைப்பேன்’ என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணனிடம் வேண்டுகிறாள். நமது ஒவ்வொரு செயலையும் நம் மூலம் நடத்துவிப்பது இறைவனே, நாம் அவன் கையில் ஒரு கருவியே என்னும் எண் ணத்தை வளர்த்துக் கொண்டோமானால் கஷ்டத்தைக் கொடு என வேண்ட வேண்டிய அவசியமே இல்லாமல் நம் பக்தி உறுதிப்படும்.

**பாதசேவனம் :** பாதசேவனம் என்பது இறைவனது திருவடிகளை முறைப்படி பூஜித்து வணங்குவது ஆகும். இவ்வாறு பாதபூஜை செய்வதன் உட்கருத்து ஒரு ஸாதகன்தன்னை இறைவனுக்கு தொண்டு செய்யும் தொண்டனாகக் கருதுகிறான் என்பதே ஆகும். ஒரு சிஷ்யன் தனது பாதங்களுக்கு பூஜை செய்வதைக் காட்டிலும் தன் உபதேசங்களின்படி நடந்து கொள்வதையே ஒரு குரு பெரிதும் விரும்புவார். குருவின் கொள்கைகளை நல்ல முறையில் பிரசாரம் செய்து பரப்புவதே குருவிற்கு ஒரு ஸாதகன் செய்யும் உண்மையான பாதசேவை ஆகும்.

**அர்ச்சனம் :** இறைவனின் திருவுருவத்தை அலங்காரம் செய்து மண்டபத்தில் எழுந்தருளச் செய்து சிறந்த வாசனைப் பூக்களால் இறைவனின் நாமங்களைச் சொல்லி அர்ச்சிப்பதே இவ்வகை பக்தியாகும். குருவினுடைய படத்தை வைத்து இவ்வாறு அர்ச்சனை செய்வதும் அல்லது அவரது உருவை மனதில் நினைத்து தியானம் செய்வதும் இந்த வகை பக்தியைச் சேர்ந்தது ஆகும்.

**வந்தனம் :** இறைவனை அடைக்கலமாய் அடைந்து ஆன்மீக உணர்வு பூர்வமாக தியானிப்பதே இவ்வகை பக்தியாகும். ஆன்மீக உணர்வு பூர்வமான பிரார்த்தனை இறைவனை சென்று அடைவதால் அதுவும் வந்தன பக்தியுள் அடங்கும்.

**தாஸ்யம் :** தாஸ்ய பக்தியில் ஒரு ஸாதகன் இறைவனை தனது தாயாகவும் தந்தையாகவும் மற்றும் எல்லாம் இறைவனே என்றும் தான் அவனது குழந்தை எனவும் அவனுக்குக் கைங்கர்யம் செய்யவே தான் பிறவி எடுத்திருப்பதாகவும் எண்ணுகிறான். ஹனுமார் இந்த தாஸ்ய பக்திக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார்.

**ஸக்யம் :** ஸக்ய பக்தியில் ஒரு ஸாதகன் இறைவனைத் தனது நண்பனாக கருதி தனது சுக, துக்கங்களை இறைவனுடன் பகிர்ந்து கொள்கிறான். இந்த வகை பக்தியில் ஸாதகன் கடவுளுடன் நேரிடையாகத் தொடர்பு கொள்வதால் இடையில் ஒருவரும் தேவைப் படுவதில்லை. குருவிடம் ஆன்மீக உணர்வு வளரும்போதே மரியாதையும் நன்றி உணர்வும் கூட வளர்கின்றன. எனவே ஒரு ஸாதகனுக்கு இறைவனைப் போன்று குருவிடம் ஸக்ய பக்திக்கு அவ்வளவாக இடமில்லை. 60% ஆன்மீக நிலை அடைந்த வெகு அபூர்வமான சில ஸாதகருக்கே குருவிடம் ஸக்ய பக்தி சாத்தியமாகும். அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணனிடம் இருந்த நட்புணர்வு இந்த ஸக்ய பக்தியின் ஈடு இணையில்லாத எடுத்துக்காட்டாகும்.

**ஆத்ம நிவேதனம் :** ஒரு ஸாதகன் ஆத்ம நிவேதனமாக தன்னையே முழுமையாக இறைவனிடம் அர்ப்பணிப்பது நவவித பக்திகளுள் மிகவும் உயர்ந்ததும் உன்னதமானதும் ஆகும். இந்த முறையில், ஒரு பக்தன் இறைவனிடம் நல்லது, பொல்லாதது ஆகிய எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி கூறி தன்னை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணம் செய்கிறான். ஸாதகன் தனது குருவிடம் அன்றாட வாழ்வில் தான் சந்திக்கும் எல்லா நிகழ்வுகளிலும் தனது செயல்கள், அதில் தான் எதிர்கொள்ள நேர்ந்த தடங்கல்கள், தனது மனதில் எழும் சந்தேகங்கள் போன்ற எல்லாவற்றையும் தெரிவிப்பதே ஆத்ம நிவேதனம் ஆகும்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626



# லிங்கம்

உலகில் உள்ள தெய்வங்கள் அனைத்திற்கும் தனிப்பட்ட உருவம் ஏற்படுத்தப்பட்டு, சிலா ரூபமாகவே வழிபடுபவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால் சிவபெருமானுக்கு மட்டும் சிலா ரூபம் வைக்காமல் லிங்க ரூபமாகவே வழிபாடு நடைபெறுகிறது.

ஏன் இப்படி சிவன் சிலா ரூபமாக இல்லாமல் லிங்க ரூபமாக வழிபடப்படுகிறார்? என்பதற்கு, லிங்க புராணம் ஒரு கதை சொல்கிறது. ஒருமுறை பிரம்மாவுக்கும் மகாவிஷ்ணுவுக்கும் இடையே தங்களில் யார் பெரியவர்? என்ற வாக்குவாதம் ஏற்பட்டபோது மிகப் பெரிய அக்னிகோளமாக அவர்கள் நடுவே தோன்றினார் சிவபெருமான். அதுவே முதன் முதலாக இறைவன் எடுத்த லிங்க வடிவம். அன்று முதல் லிங்கோத்பவம் உதயமாயிற்று. லிங்கோத்பவம் என்றால் லிங்கம் தோன்றுதல் என்று பொருள். அன்று முதல் இன்று வரை சிவபெருமான் லிங்க உருவத்திலேயேதான் வழிபடப்பட்டுவருகிறார். அவ்வாறு வழிபாட்டுக்குரிய லிங்கங்கள் பலவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன.

அவற்றில் சிலவகையான லிங்க ரூபங்களைப் பார்ப்போம்.

### சுயம்பு லிங்கம்

தானாகவே இறைவனின் இச்சைப்படி தோன்றிய லிங்கம்.

### தெய்வீக லிங்கம்

தேவர்களால் பூஜிக் கப்பட்டு ரிஷிகள் மூலமாக பூமிக்கு வந்த லிங்கம்.

### அர்ஷ லிங்கம்

ரிஷிகளும் முனிவர்களும் தங்கள் வழிபாட்டுக்கென உரு வாக்கிய லிங்கம்.

### மனுஷ்ய லிங்கம்

சாதாரண மனிதர்களால் உரு வாக்கப்பட்ட லிங்கம். இந்த லிங்கம் மேலும் பல வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. குறைந்தது 96 வகை மனுஷ்ய லிங்கங்கள் இருக்கலாம் என்று மகுடாகமம் என்னும் ஆகம நூல் கூறு கிறது.

இந்த 96 வகை லிங்கங்கள் அவற்றின் அமைப்பு அதாவது பீடத்தின் அளவு பாணத்தின் அளவு ஆகியவற்றைப் பொறுத்து மேலும் பிரிக்கப்படுகிறது. கீழே இருக்கும் சதுரப் பகுதி பிரம்ம பாகம் எனவும், நடுப்பகுதி விஷ்ணு பாகம் எனவும் மேற்பகுதி ருத்ர பாகம் எனவும் வழங்கப்படுகின்றன.

### க்ஷணிக லிங்கம்

தற்காலிக வழிபாட்டுக்குப் பயன்படுவது. அந்தக் காலத்தில் நீண்ட தூரம் பயணம் செல்பவர்கள் தங்களுடன் லிங்கத்தை எடுத்துச் செல்லாமல் ஆங்காங்கே கிடைக்கும் தெய்வீகப் பொருட்களைக் கொண்டு அன்றைய பூஜைக்காக உருவாக்கும் லிங்கமே க்ஷணிக லிங்கம் எனப்படுகிறது.இத்தகைய லிங்கங்கள், மலர், அன்னம், சந்தனம், விபூதி ஆகிய பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படலாம். அவை உரு வாக்கப்படும் பொருட்களுக்கேற்றவாறு பெயர் பெறுகின்றன. உதாரணம், பூக்களால் உருவாக்கப்பட்ட லிங்கம் க்ஷணிக புஷ்ப லிங்கம் எனப்படுகிறது.

### வர்த்தமானக லிங்கம்

வழிபாட்டுப் பெருமைக்குரியது. பிரம்ம பாகமும், விஷ்ணு பாகமும் ஒரே அளவு இருந்து ருத்ர பாகம் மட்டும் அதைப்போல இரு மடங்கு இருப்பதே வர்த்தமானக லிங்கம் எனப்படும். இத்தகைய லிங்கம் வழிபடுவோருக்கு முக்தி அளிக்கவல்லது.

### ஆத்ய லிங்கம்

இதில் மூன்று பாகங்களும் சமமான அளவு இருக்கும். இவை தவிர புண்டரீகம்,விசாலா, வத்சா மற்றும் சத்ரு மர்த்தனா என்று நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது.



புண்டரீக வகை லிங்கத்தை வழிபட்டால் பெரும் புகழும், விசாலா வகை லிங்கம் பெரும் பொருளும், வத்சா லிங்கம் எல்லா வளங்களும், சத்ரு மர்த்தனா எல்லாவற்றிலும் வெற்றியையும் தரு வன என்கிறது ஆகம சாஸ்திரம். ஏக முக லிங்கம், சதுர் முக லிங்கம், பஞ்ச முக லிங்கம் என முகங்களின் அடிப்படையிலும் லிங்கங்கள் பகுக்கப்படுகின்றன. இதில் பஞ்ச முக லிங்கம் என்பது சிவனுடைய தத் புருஷ, அகோர, சத்யோ ஜாத, வாமதேவ, ஈசான முகங்களைக் குறிக்கும். சதுர்முக லிங்கம் என்பது ஈசான முகம் தவிர மற்ற நான்கும் கொண்டது. பஞ்சபூத லிங்கங்கள் என்றும் ஒரு வகை இருக்கிறது. அவை ப்ரித்வி லிங்கம் (பூமி), வாயு லிங்கம், ஜலலிங்கம், ஆகாச லிங்கம், தேஜோ லிங்கம் (அக்னி). இவை எல்லாமே மனுஷ்ய லிங்க வகைகள்தான்.

களிமண், உலோகம் அல்லது கற்களாலும் லிங்கங்கள் செய்து வழிபடலாம் என்று காமிக ஆகய நூல் கூறுகிறது. களி மண்ணிலேயே இரண்டு வகை லிங்கங்கள் செய்யப்படுகின்றன. சுட்ட களிமண் லிங்கம், சுடாத பச்சைக் களிமண் லிங்கம், சுட்ட களி மண் லிங்கம் பொதுவாக தாந்திரீகர்களாலும், அபிசார (பில்லி சூனிய) தோஷம் உடையவர்களாலும் வணங்கப்படுகிறது. இவை தவிர நவரத்தினங்களால் ஆன லிங்கங் களும் உண்டு. அவை பன லிங்கங்கள் எனப்படுகின்றன. சில முக்கியமான வகை லிங்கங்களையும் அவை தரும் பலன்களையும் பார்ப்போம்.

### பாண லிங்கம்

பாண லிங்கம் வடித்தெடுக்கப் படுவதில்லை. இந்தலிங்கத்தில்எப்பொழுதும்சிவசாநித்யம்உண்டு. பாணாசுரன் ஒரு சின்ன உளுந்து முதல் ஒரு முழம் முடிய உள்ள லிங்கங்களை மந்திரங் கொண்டு பூசித்தமையால் பாணலிங்கம் எனப்படுகிறது என்றும் கூறுவர். ஆயிரம் கல் சிவ லிங்கத்திற்கு ஒரு ஸ்படிக லிங்கம் சமம் என்றும் 12 லட்சம் ஸ்படிக லிங்கங்களுக்கு ஒரு பாணலிங்கம் சமம். பாண இலிங்கம் என்பது புண்ணிய நதிகளான கங்கை யமுனை நர்மதை போன்றவற்றில் லிங்க வடிவிலே உருண்டோடி வரும்.

### கந்த லிங்கம்

சந்தனம், குங்குமம், மற்றும் கஸ்தூரி ஆகியன கலந்து உருவாக்கப்படுவது. இது க்ஷணிக லிங்க வகையைச் சார்ந்தது. நம் தேவைக்கேற்ற அளவில் இதை உருவாக்கிக் கொள்ளலாம். வழிபடுவதால் சிவசாயுஜ்ய மோட்சம் எனப்படும் பிறப்பில்லாத நிலை சித்திக்கும்.

### புஷ்ப லிங்கம்

பலவகையான வாசனையுள்ள மலர்களாலும், பல நிறம் கொண்ட அழகிய மலர்களாலும், உருவாக்கப்படுவது. வழிபடுவதால் நில சம்பந்தமான பிரச்னைகள் தீரும், நல்ல சொத்தும் சேரும்.

### கோசாக்ரு லிங்கம்

பழுப்பு நிறத்தில் உள்ள பசுவின் சாணத்திலிருந்து உருவாக்கப்படும் லிங்கம் இது. இதை வணங்கினால் வளம் பெருகும். இதுவும் க்ஷணிக லிங்க வகையே ஆகும்.

### வாலுக லிங்கம்

சுத்தமான மணல் கொண்டு உருவாக்கப்படும் இதை வணங்கினால் கல்வியும் ஞானமும் உண்டாகும்.

### யவாகோதுமாசாலிஜ்ஜ லிங்கம்

இந்த லிங்கம் யவை, சோளம், கோதுமை போன்ற தானியங்களின் மாவினால் உருவாக்கப்படுகிறது. இது குழந்தை பாக்கியத்தை அருளும்.

### சீதாகண்ட லிங்கம்

இனிப்புகளால் உருவாக்கப்படும் இது, நல்ல உடல் ஆரோக்கியத்தை அளிக்க வல்லது.

### லவண லிங்கம்

உப்போடு மஞ்சள் மற்றும் திரிகடுகம் எனப்படும் சித்த மருந்து கலந்து செய்யப்படுகிறது. இது மற்றவர்களை வசீகரிக்கும் சக்தியை அருள்கிறது.

### திலாப்சிஷ்த லிங்கம்

எள்ளை அரைத்து செய்யப்படும் இது, எல்லா ஆசைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும்.

### பாம்ச லிங்கம்

சாம்பல் கொண்டு செய்யப்படும் இது, எல்லா நற்குணங்களையும் வளர்க்கும்.

### கூட லிங்கம் அல்லது சீதா லிங்கம்

வெல்லத்தால் செய்யப்படும் இது, மன நிம்மதியை அருளும்.

### வன்சங்குர லிங்கம்

மென்மையான மூங்கில் இலைகளால் ஆனது இந்த வகை லிங்கம். வழிபடுவோருக்கு நோய்

நொடியற்ற நீண்ட ஆயுளைத் தரும்.

### பிஷ்டா லிங்கம்

அரிசிமாவினால் செய்யப்படும் இந்த லிங்கம், நல்ல கல்வியறிவைத் தரும்.

### ததிதுக்த லிங்கம்

பாலிலிருந்தும் தயிரிலிருந்தும் முழுவதுமாக தண்ணீரை நீக்கிய பிறகு இந்த லிங்கம் உரு வாக்கப்படுகிறது. வணங்கியோருக்கு மன மகிழ்ச் சியையும் வளங்களையும் அருளும் தன்மையது.

### தான்ய லிங்கம்

நவ தானியங்களால் உருவாக்கப்படும் இந்த லிங்கம், விவசாயிகளுக்கு நல்ல விளைச்சலைத் தரும்.

### பழ லிங்கம்

பல்வகையான பழங்களால் உருவான இது, பழத்தோட்டம் வைத்திருப்பவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

### தாத்ரி லிங்கம்

நெல்லிக்காயைக் கொண்டு உருவாக்கப்படும் இது, மிகவும் கஷ்டப்படுபவர்களுக்கு அந்த வாழ் விலிருந்து விடுதலையைத் தரும்.

### நவநீத லிங்கம்

வெண்ணெயால் உருவான இது, பணமும் புகழும் தரும்.

### கரிக லிங்கம்

விசேஷ வகைப் புல்லால் உருவாக்கப்படும் இது, துர்மரணத்தைத் தடுக்கும்.

### கற்பூர லிங்கம்

கற்பூரத்தினால் இது உருவாக்கப்படுகிறது. சிறந்த ஞானத்தைத் தந்து மாயையை அழிக்கும்.

### ஆயஸ்காந்த லிங்கம்

காந்தத்தால் உருவான இது, சித்தர்கள் வணங்கும் லிங்கம். அஷ்டமா சித்திகளையும் எளிதாக அளிக்க வல்லது.

### மவுகித்க லிங்கம்

முத்துகளை எரித்த சாம்பலிலிருந்து உருவாக்கப்படும் லிங்கம். மங்களமும், செல்வ வளமும் அருளும் தன்மையது.

### ஸ்வர்ண லிங்கம்

தங்கத்தால் உருவானது. முக்தி அளித்து பிறவா நிலைக்கு உயர்த்தும்.

### ரஜத லிங்கம்

வெள்ளி லிங்கம். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.

### பித்தாலா லிங்கம்

பித்தளையால் உருவாக்கப்படும் இது, பழுத்த இலை மரத்திலிருந்து உதிர்வது போன்ற பயமில்லாத மரணத்தைத் தரும்.

### திராபு லிங்கம்

தகரத்தால் செய்யப்படும் இந்த லிங்கம், வணங்குபவருக்கு எதிரிகளே இல்லாமல் செய்து விடும் தன்மை உடையது.

### ஆயச லிங்கம்

கந்தக அமிலத்தால் செய்யப்படும் இந்த லிங்கம் எதிரிகளின் தொந்தரவை அழிக்கும்.

### சீசா லிங்கம்

வெள்ளீயத்தால் செய்யப்படுகிறது இந்த லிங்கம். இதை வணங்குபவர்களை எதிரிகளால் நெருங்கவே முடியாதவாறு செய்யும் தன்மையது.

### அஷ்டதாது லிங்கம்

எட்டு வகையான தாதுக்களால் உருவாக்கப்படும் இது, சித்தி அளிக்கவல்லது.

### அஷ்ட லோக லிங்கம்

எட்டு வகையான உலோகங்களால் செய்யப்படும் இதை வணங்கினால் தொழுநோய் குணமாகும்.

### வைடூர்ய லிங்கம்

நவ ரத்தினங்களுள் ஒன்றான வைடூரியத்தால் உருவான இது, எதிரிகளின் எதிர்பாராத தாக்குதலிலிருந்து காப்பாற்றும்.

### ஸ்படிக லிங்கம்

ஸ்படிகத்தால் ஆன இது, எல்லா ஆசைகளையும் நிறைவேற்றும்.

### பாதரச லிங்கம்

பாதரசத்தால் ஆனது இந்த லிங்கம். அளவிட முடியாத செல்வத்தைக் கொடுக்கும்.

மேற்கூறிய லிங்க வகைகளில் 19 லிங்கங்கள் க்ஷணிக லிங்க வகையைச் சேர்ந்தவை. மற்றவை மனுஷ்ய லிங்க வகையைச் சேர்ந்தவை. இந்திரன் மணி மாய லிங்கத்தையும், சூரியன் தாமரமய லிங்கத்தையும், சந்திரன் முக்தி லிங்கம் எனப்படும் முத்துகளால் ஆன லிங்கத்தையும், குபேரன் ஹேமலிங்கம் எனப்படும் தங்கத்தால் ஆன லிங் கத்தையும் அணிந்திருப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன.

சி.ஷ்யாம் சுந்தர்



www.aanmeegamalar.com